# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 06 அதிர்வு 71 வைகாசி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Transco CARGO
We love to deliver
ONLY TRANSCO DOES WEEKLY SHIPMENTS TO SRI LANKA
Track your parcel online
Air delivery within 4-7 days NEW
Door delivery availale
1300 187 267
TranscoCargo.com.au

SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| MAY 6* | JUN 16 |
| MAY 13 | JUN 23 |
| MAY 20* | JUN 30 |
| MAY 27 | JUL 7 |
| JUN 3* | JUL 14 |
| JUN 10 | JUL 21 |
| JUN 17* | JUL 28 |
| JUN 24 | AUG 4 |
| JUL 1* | AUG 11 |

*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

## சுடர்களில் வழிந்த உறைகுருதி



MCN Cakes
Birthday கேக்


Wedding கேக்

Butter, Ribbon & Chocolate கேக்
Also available :
Fish buns, Onion buns, Stuffed Godamba Roti, Lamprais, Rice & Curry & many more ...


MCN Cakes
Shop 105, Level 1
Dandenong Plaza
in the food court near Reject Shop/Westpac
(03) 90188188
0433662477
Open 7 days

See Page 09

EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
DANDENONG

நகை அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
© Bala 0420 877 303

GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# அணுகுண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் வெளியே;
# வீடின்றி நடுத்தெருவில் மக்கள் உள்ளே!



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

வீடு, இது வெறும் ஒரு சொல்லா ? அல்லது அது உங்களுக்குள் எப்பொழுதும் சுமந்துகொண்டு அலையும் கைவிட முடியாத ஒன்றா?

- Nomadland .

கடந்த மார்ச் 2023 மாதம் இரண்டு அதிர்ச்சிகரமான விஷயங்கள் நடந்தேறின. ஒன்று ஆஸ்திரேலிய அரசாங்கம் யுத்தத்திற்கு தயாராகுவதற்காக 368 பில்லியன் டொலர் செலவில் அணு ஆயுத கப்பல் ஒப்பந்தம் ஆஸ்திரேலியா , அமெரிக்க மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் நாடுகளுக்கிடேயே கையெழுத்தானது. அதன் பெருமையைப் பற்றி பிரதமர் அல்பானிஸ் தொண்டை கிழிய தனக்கு கிடைத்த அத்தனை மைக்குகளின் முன் கத்திக்கொண்டிருந்தார். அடுத்த இரண்டு வாரங்களில் அவரைத் தலைகுனியச் செய்யவைக்கும் புள்ளிவிவரக் கணக்கை ஆஸ்திரேலியப் புள்ளியியல் கழகம் வெளியிட்டது. அதாவது நாடெங்கிலும் சுமார் 122,494 பேர் வீடின்றி தெருவில் நாடோடியாக அலைகின்றனர். அதாவது ஒரு பக்கம் ,பகட்டு ஆடம்பர வீண் பம்மாத்துக் காட்டுவதற்கு செலவு செய்யும் நாட்டில் இன்னொரு பக்கம் இருக்கவே இடமின்றி மக்கள் அல்லல்படுகின்றனர்.

அதாவது அந்த ஒப்பந்தம் கையெழுத்தான அன்று இரவில் தூங்குவதற்கு இடமில்லாமல் தெருவில் குழந்தைகளின் அதாவது 12 வயதுக்கு உட்பட்டோர் மட்டும் எண்ணிக்கை ஏறக்குறைய 17,646 ( 2021 ஆம் ஆண்டு மதிப்பீட்டு கணக்கு ,2023 ஆம் ஆண்டு உண்மை நிலை-வரம் இதைவிட அதிகமாகவே இருக்கும் ). ரோம் நகர் பற்றி எரியும் போது ஃபிடில் வாசித்த நீரோ மன்னன் கதை போல் இருக்கிறதல்லவா ?




ஆஸ்திரேலிய புள்ளியியல் கழகத்தின் கூற்றுப்படி, வீடற்றவர் என்பது ஒருவர் தங்களுக்கு பொருத்தமற்ற மாற்று தங்குமிடங்கள் மற்றும் அவர்களின் தற்போதைய வாழ்க்கை சூழலுக்குப் பொருந்தாத இருப்பிடங்களில் வசிப்பவராக இருப்பவர்:

- ✕ போதுமான வசதியற்ற வதிவிடங்களில் வசிப்போர் ( கூடாரங்கள் அல்லது வெளியே தூங்கும் மக்கள்,
- ✕ தங்குமிட ஒப்பந்த காலம் குறுகியதாகவோ, இல்லாமலோ அல்லது இருந்தால் நீட்டிக்க முடியாதாகவோ இருத்தல் (பிற வீடுகளில் தற்காலிகமாக தங்கியிருக்கும் மக்கள், தங்கும் விடுதிகளில் வாழும் மக்கள் )
- ✕ தங்கள் தேவைகளுக்கான தேவையான இருப்பிடத்தைக் கட்டுப்படுத்தவும், அணுகவும் அனுமதியற்ற வதிவிடங்களில் வசித்தல். (வீடற்றோருக்கான தங்குமிடத்தில் உள்ளவர்கள், கடுமையான நெரிசலான குடியிருப்புகளில் வாழும் மக்கள்)

வீடற்ற நிலைக்கான காரணங்கள் எண்ணற்றவை மற்றும் சிக்கலானவை. பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் எடுத்த கணக்கெடுப்புகளில் இருந்து முக்கியமான காரணங்களாக இருப்பவை பின்வருமாறு .

1. வீடு மற்றும் குடும்பம் சார்ந்த வன்முறை
2. மனநிலை கோளாறுகளால் ஏற்படும் வீடற்ற நிலை
3. வாழ்க்கைமுறையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள்

குடும்பம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக ஏற்படும் வன்முறைகளினால் பாதிக்கப்படுவது பெண்களும் ,குழந்தைகளுமே. 2021-22 ஆம் ஆண்டில் மட்டும் 108,000 பேர் குடும்ப வன்முறை காரணமாக வீடற்றவர்களின் நல்வாழ்வு பேணும் அலுவலர்களை உதவிக்காகத் தொடர்பு கொண்டிருக்கின்றனர். அதில் 75% சதவிகிதம் பேர் பெண்கள் .

மனநோய் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளும், வீடற்ற நிலையும் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை, இவ்வகையான மனநிலை நோய்கள் பாதிக்கப்பட்டவரின் தன்னம்பிக்கை, வேலைவாய்ப்பை அடைவதற்கான அல்லது அவர்களின் வீட்டு ஒப்பந்த நிலையை தக்கவைக்கும் திறனை நேரடியாகப் பாதிக்கிறது. 2021-22 ஆம் ஆண்டில் மட்டும் மனநலநிலைப் பாதிப்பினால் சுமார் 82,500 பேர் சிறப்பு வீடற்ற சேவையின் ஆதரவினை நாடினர். இவர்களில் பாதிக்கும் குறைவானவர்கள் வீடற்ற நிலையை அனுபவித்தனர் மற்றும் சுமார் 12% பேர்களுக்கு தூங்க கூட இடம் கிடைக்காமல் தெருவில் அலைகின்ற நிலைமை தான் .

அன்றாட வாழ்வில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் வீடற்ற நிலைக்கு வழிவகுக்கும். உதாரணமாக திடீர் வேலை இழப்பு ,வாழ்க்கைத் துணையின் மரணம், குடும்ப உறவு சிக்கல்கள் தொடர்பான பிரச்சினைகள் என்று பல.ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு வேலை சம்பளம் கிடைக்க தவறினாலும் வீடற்ற நிலை தான். தொடர்ந்து அதிகரிக்கும் வீட்டு வாடகையும் மற்றும் குறைவாக உள்ள அணுக்கத்தக்க வீடுகளின் எண்ணிக்கையும் மக்களை வீடற்ற நிலைக்கு தள்ளுகின்றன. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட தீத்தொற்று,கொரோனா நோயினால் ஏற்பட்ட திடீர் வாழ்க்கை முறை மாற்றங்கள் பல்லாயிரம் மக்களை நடுத்தெருவிற்கு தள்ளின.

இப்படி வீடற்ற நிலைக்கு காரணம் போதுமான வீடுகள் இல்லாததே என்று நாம் நினைக்கக் கூடாது. 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 10.1 சதவிகித வீடுகள் யாரும் வசிக்காமல் காலியாக இருப்பது தெரியவந்தது, அதாவது 1 மில்லியனுக்கு அதிகமான வீடுகள் (1,043,776). இது மட்டுமல்லாமல் பல வீடுகள் குறைந்த கால வசிப்பிற்கு மற்றும் விடுமுறை கால தங்கும் விடுதிகளாக பயன்படுத்தப்படுவதால் பலருக்கும் வீடு கிடைக்காத நிலை.

இந்த நிலையை மாற்றுவதற்கு நமது அரசாங்கங்கள் என்ன செய்ய முடியும்? பல்வேறு தன்னார்வ அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் கீழ்க்காணும் திட்டங்களைப் பரிந்துரை செய்கின்றன.

- ✕ போதிய அணுக்கத்தக்க வீடுகளின் (Affordable Housing ) எண்ணிக்கையை அதிகரிப்பது
- ✕ எளிதில் பாதிப்படையக்கூடிய மக்களுக்கான (Vulnerable People ) நேரடித் திட்டங்கள்
- ✕ வீடற்ற நிலையை போக்குவதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை
- ✕ வீடற்ற நிலை உண்டாக்ககூடிய பிரச்சினைகளுக்கான தீர்வு அமைப்புகளை நியமித்தல்
- ✕ வேலைவாய்ப்பு மற்றும் மாறிவரும் பணவீக்க சூழ்நிலைக்கு தகுந்தபடி வருமான உயர்வு
- ✕ வாடகை உச்சவரம்பு , காலி மனைகளை அரசாங்கத்தின் கட்டுக்குள் கொண்டுவந்து வீடற்றவர்களுக்கு பகிர்ந்தளித்து, குறைந்த கால தங்கும் வீடுகளுக்கு கால வரம்பு, இன்ன பிற.

இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்ற முடியாத திட்டங்களல்ல. மக்களை மனதில் வைத்து மக்களுக்காக இயங்கும் தொலைநோக்குத் தலைவர்கள் வேண்டும். நோர்வே மேற்கண்ட பல திட்டங்களை நிறைவேற்றி, வீடற்ற மக்களே தலைநகரான ஹெல்ஸின்கியில் இல்லை என செய்திருக்கிறது. நோர்வேயால் முடியுமென்றால் நம்மாலும் முடியும்.

ஒவ்வொரு இரவும், சுமார் 200 ஆஸ்திரேலியர்களில் ஒரு நபர் வீதம் தூங்குவதற்கு பாதுகாப்பான அல்லது அணுக்கத்தக்க இடம் இல்லாமல் இருக்கும் கையறு நிலை. வீடு என்பது நான்கு சுவர்கள் மற்றும் கூரை மட்டுமல்ல. இது பாதுகாப்பு மற்றும் மனநிம்மதிக்கான அடித்தளமாகும். பாதுகாப்பான வீட்டுவசதியை பேணுவது மிகவும் அடிப்படையான மனித உரிமைகளில் ஒன்றாகும்.

வீண் ஜம்பம் அடிப்பதற்காக எப்போதோ வரப்போகும் அல்லது வரவே வாய்ப்பில்லாத யுத்தத்தின் பொருட்டு, அமெரிக்கா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியங்களை முன்னேற்றுவதற்காக செலவிடப்போகும் 368 பில்லியன் டொலரில் என்னென்ன நன்மைத் திட்டங்களைச் செய்ய முடியும் ? உதாரணத்திற்கு இந்தப் பணத்தின் ஒரு பங்கில் ஒட்டுமொத்த நாட்டின் வீடற்றவர்களுக்கான வீட்டு வசதிக்காக செலவிட்டால், வீடில்லாமல் தெருவில் உறங்கும் நிலையை அறவே ஒழித்துவிட முடியும். அரசியல்வாதிகளைப் பொறுத்த வரை மக்களை நேரடியாகப் பாதிக்கும் எந்தவிதப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது என்பது அவர்கள் கனவிலும் எண்ணிப்பார்க்க கூடாத விடயமாகும். பிரச்சினைகள் இருக்கும்வரையே அதையொட்டி அவர்கள் அரசியல் செய்யமுடியும். பொய்யான வாக்குறுதிகள் அளித்துவிட்டு அடுத்த முறை பதவிக்கு வரமுடியும்.

ஆஸ்கர் விருது வாங்கிய Nomadland படத்தில் அமெரிக்காவின்முதலாளித்துவ சமூகத்தின் பேராசை, எவ்வாறு பணவசதியற்ற பெரும் மக்கள் திரளை நிரந்தர இருப்பிடம் இல்லாமல் நாடோடிகளாக வைத்திருக்கிறது என்பதையும், அரசாங்கம் கைகளைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்கிறது என்ற உண்மையையும் நேரடியாகப் படம் பிடித்திருப்பார்கள். இங்கும் அதே போன்று வீடற்ற நாடோடிச் சமூகம் (Nomads) ஏற்படும் நாள் வெகுதொலைவில் இல்லை..அதனாலென்ன நம் பெருமை பறைசாற்ற நீர்மூழ்கி க்கப்பல்கள் இருக்கிறதல்லவா!

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:06 அதிர்வு: 71 வைகாசி 2023 தொ.பே:1800 960 162

# ஒன்றுபடுதலே உண்மையான அஞ்சலி

சதுப்பு நிலமொன்றுக்குள் தமிழினம் அடைக்கப்பட்டு, நாசகாரச் சக்திகளின் கூட்டுப் பசிக்கு இரையாக்கப்பட்ட கொடூரத்தை நினைவேந்தும் 'முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாள்' இம்மாதம் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. அண்மைக் கால உலகவரலாற்றில் இவ்வாறான கோரப்படுகொலைகள் இடம்பெற்றது கிடையாது என்னுமளவுக்கு, ஈழப்போரின் இறுதிநாட்களில் நிகழ்ந்த குரூரங்களை வீடியோக்களாகவும், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களாகவும், புகைப்படங்களாகவும் ஆதாரத்தோடு நாம் முன்வைத்தும் கூட, இன்னமும் எமக்கு நேர்ந்த அநீதியை உலகம் 'இனப்படுகொலை' என்று ஏற்றுக்கொள்ளவேயில்லை. ஒப்புக்குச் சப்பாணியாக ஜெனீவா மனித உரிமைகள் அமர்வுகளில், இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக மட்டுமே இறுதிப் போரில் நடந்த போர்க்குற்ற விவகாரங்கள் முன்வைக்கப்படுகின்றனவே தவிர, எமக்கு நீதி வழங்கவேண்டுமென்னும் நோக்கம் மேற்கு நாடுகளுக்கு அறவே கிடையாது. அப்படியொரு எண்ணம் அந்த நாடுகளுக்கு இருந்திருக்குமானால், இலங்கையில் முள்ளிவாய்க்காலில் தமிழினம் மீது மேற்கொள்ளப்பட்டது 'இனப்படுகொலையே' என்று சொல்லியிருக்கவேண்டும்.

உக்ரைனில் நாலைந்து பொதுமக்களின் சடலங்கள் ஒன்றாக மீட்கப்பட்ட சம்பவத்தை மட்டும் வைத்துக்கொண்டு அங்கு ரஷ்யா இனப்படுகொலையில் ஈடுபடுகின்றது என்று அறிவிக்க முடியுமானால், ஈழத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கொத்துக் கொத்தாக கொன்று வீழ்த்தப்பட்டதை மட்டும் இனப்படுகொலையாக ஏற்க ஏன் சர்வதேசம் தயங்குகின்றது? உலகநாடுகளின் நீதியென்பது இலாபத்தையும், பலத்தையும் அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. ஒன்றில், உக்ரைன் போல உலக நாடுகளுக்கு இலாபத்தை கொடுக்கக்கூடிய ஒரு நாடாக நாமிருக்க வேண்டும் அல்லது இஸ்ரேலைப் போல எல்லோரையும் ஆட்டுவிக்கும் சக்தி கொண்டவர்களாக மாறவேண்டும். இதில் முதலாவதற்கு இப்போதைக்குச் சாத்தியமில்லை. ஏனெனில் நம் நாட்டு வளங்களை உலகநாடுகள் அனுபவிக்க வேண்டுமானால், அதற்கு நிலப்பாவடை விரிக்க இலங்கை அரசாங்கமே தயாராக இருக்கின்றது. எனவே நம்மால் உலக நாடுகளுக்கு ஒரு சதம் கூட இலாபம் கிடைக்கப்போவதில்லை. ஆனால், இஸ்ரேலியர்கள் போல பலமான சக்தியாக நாம் மாற முடியும்.

நாடாற்றவர்களாக பல்லாயிரம் வருடங்கள் யூதர்கள் அலைந்தபோது, அவர்கள் ஒவ்வொருவரினதும் நெஞ்சிலும், 'இஸ்ரேல்' என்ற தேசத்தை மானசீகமாகச் சுமந்துகொண்டேயிருந்தார்கள். எல்லா நாடுகளுக்கும் சிதறிய யூதர்கள் அந்தந்த நாடுகளில் படித்து, உழைத்து, தவிர்க்க முடியாத சக்திகளாக உருமாற்றம் பெற்றனர். யூதர்கள் இல்லாவிட்டால் எதுவுமே செய்யமுடியாது என்ற நிலை உலகநாடுகளில் தோன்றியபோது, யூதர்கள் வைத்ததே சட்டமானது. பாலஸ்தீனத்தை யூதர்கள் பலவந்தமாகப் பறித்தெடுத்து, தம் கனவு தேசமான இஸ்ரேலுக்கு உயிரூட்டியபோது எல்லா நாடுகளும் அதைப் பராக்குப் பார்த்தனவே தவிர, பாலஸ்தீனத்துக்காக எவையும் பரிவு கொள்ளவில்லை. ஆக, பலத்தின் முன்னால் பணிவதே உலகநாடுகளின் நீதித்தராசின் இயல்பாக இருக்கின்றது.

ஈழத்தமிழர்களும் இப்போதைக்கு யூதர்களைப் போன்றவர்களே. நாடற்ற மக்கட்கூட்டமாக, நெஞ்சிலே தமிழ்த் தேசத்தைச் சுமந்துகொண்டு, உலகின் எல்லாப் பாகங்களிலும் பரவியிருக்கிறோம். நாம் புலம்பெயர்ந்திருக்கும் தேசங்களின் பொருளாதாரம், அரசியல், அறிவியல் என அத்தனை துறைகளிலும் கொடிகட்டிப் பறக்கவும் செய்கிறோம். ஆனால் பரிதாபம் என்னவெனில், உலகநாடுகள் எம்மை யூதர்களின் சுண்டுவிரலளவுக்கு கூட மதிப்பதில்லை என்பதே. இதற்கு என்ன காரணம்? வழக்கம் போல தமிழர்களின் பிறவிக்குணமான ஒன்றுபடாமை தான். எல்லாவற்றுக்கும் போட்டியும், பொறாமையும் கொண்டு தனித்தனி ஆவர்த்தனங்கள் வாசித்து, கடைசியில் எம்மினத்தை நாமே கூறுபோட்டு விற்றுக்கொண்டிருக்கிறோம். இந்தக் கூறுபோடல்கள் புலம்பெயர் நிதிசேகரிப்பு அமைப்புகளில் தொடங்கி இப்போது மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்வரை புற்றுநோயாகப் பரவிவிட்டது. ஒரு நாட்டிலேயே நாலைந்து நினைவேந்தல்கள். இப்படி கூறுகளாக உடைந்து, நமக்குள் நாமே முரண்பட்டுக்கொண்டிருப்பதால் உலகநாடுகள் எம்மைப் பார்த்து எம் பலவீனத்தைப் பார்த்துச் சிரிக்குமே தவிர, பலத்தைப் பார்த்துப் பரவசப்படப்போவதில்லை. அதைவிட சீமான் போன்ற பொய்மான்களுக்குப் பின்னால் செல்வதே தமிழர்களின் வரலாற்றுக்கடமை என்பது போலவும் நம்மில் பலர் மாறிக்கொண்டிருக்கிறோம். இதுவும் ஆபத்தான போக்கே. எனவே, யூதர்களைப் போல புலம்பெயரிகளான தமிழர்களும் ஒருதேசமாக மனதால் திரண்டால்தான், ஒரே இலட்சியத்தோடு ஒன்றாக நின்றால் தான் எதையும் வென்றாகமுடியும். அதுவே முள்ளிவாய்க்காலில் இனத்துக்காக கடைசிவரை துன்பச் சிலுவைகளைச் சுமந்த ஆத்மாக்களுக்கான உண்மையான அஞ்சலியும் கூட.

# யானை புகுந்த நிலம் போல (ஆஸ்திரேலிய நிதிநிலை அறிக்கை)

**● நச்சினார்கினியன்**

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்
நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போல – பிசிராந்தையார்


*நிர்மலா சீதாராமன் இந்தியாவின் நிதியமைச்சராக பதவியேற்ற பிறகு தனது முதல் (2019-20 ஆம் ஆண்டிற்கான) வரவு-செலவுத்திட்டத்தை (பட்ஜெட்) "யானை புக்க நிலம் போல" என்ற புறநானூறு பாடலை குறிப்பிட்டு தனது அறிக்கையை தாக்கல் செய்தார். அதாவது இந்த பாடலின் விளக்கமானது , மிகச்சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து ,சிறு கவளமாக்கி யானைக்கு அளித்தால் ,அது வெகு நாட்களுக்கு உண்ணும். அதைவிடுத்து யானையிடம் நூறு வயல்களை கொடுத்தால் ஒரே நாளில் மிதித்து நாசம் செய்துவிடும். அதுபோன்று நாட்டை ஆளும் மன்னன் ,நாட்டின் தேவைக்கேற்ப வரிவிதித்து மக்களை காப்பாற்ற வேண்டும்.அதைவிடுத்து தங்களது தேவையில்லாத ஆடம்பரச் செலவுகளுக்காக முறையின்றி வரி விதித்து மக்களை கடும் இன்னலுக்கு ஆளாக்கினால், யானை புகுந்த நிலம் போலத் தானும் கெட்டு, தன் நாட்டையும் கெடுப்பான். இந்த பாடல் எவ்வாறு ஒரு அரசின் பட்ஜெட் எதனடிப்படியில் இருக்கவேண்டும் என்பதை நமக்கு சொல்கிறது. நம்மை ஆளும் தலைவர்களுக்கு , தொலைநோக்கு பார்வை மற்றும் பொறுப்பு கிடையாது. இப்போதைக்கு தாக்கல் செய்துவிட்டு அதனால் ஏற்படும் பாதிப்புகளை அடுத்து வரும் நிதியமைச்சர் பார்த்துக்கொள்ளட்டும் எனும் நழுவுகின்ற மனநிலை மட்டுமே. நான் எதற்காக இப்படி சொல்கிறேன் என்பதை ஒவ்வொரு வருடமும் ,பட்ஜெட்டில் வெளியாகின்ற புதிய திட்ட அறிவிப்புகளும், செலவீனங்களும் எவ்வாறு எந்தவித தொலைநோக்கு பார்வையில்லாமல் இருக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.*

*இவ்வாறாக சூழ்நிலையில் ஒரு புதிய கட்சி ஆட்சிக்கு வரும்போது இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்வார்கள். அது எப்போதும் ஒரு மேம்போக்கான நிதிநிலை அறிக்கை. சுஜாதா பாணியில் சொல்வேதென்றால் பல ஜல்லியடித்தல்களும், சால்ஜாப்புகளும் இருக்கும். நிதியமைச்சர்களுக்கு முக்கியமான சோதனை என்பது அதற்கு அடுத்த பட்ஜெட்டாகும் . அந்த முக்கியமான அறிக்கையை ஆஸியில் இந்த வருடம் மே 9 அன்று தாக்கல் செய்கிறார் மாண்புமிகு ஜிம் சால்மெர்ஸ்* (Jim Chalmers ) . *இந்த அறிக்கை கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட பணவீக்கம், ஏறிவரும் கடன் வட்டி விகிதம் போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையே அனைவரது எதிர்பார்ப்பையும் எகிற வைத்திருக்கிறது.*

*இந்த வருட நிதிநிலை அறிக்கையில் என்னெவெல்லாம் எதிர்பார்க்கலாம் என்பதற்கு முன் நமது நிதிநிலைமை எப்படி இருக்கிறது என்று பார்ப்பது உசிதம். 2012 ஆம் ஆண்டிலிருந்து பார்த்தோமானால், இரண்டு ஆண்டுகளை (2017-18 , 2018-19 ) தவிர மற்ற ஏனைய வருடங்களில் துண்டு விழுந்த நிதிநிலை அறிக்கையையே காண முடிகிறது. அரசு பட்ஜெட் என்பது வருவாயை பெருக்குவதும், செலவீனங்களை குறைப்பதும் தான் என்று சொல்வார்கள்.. ஒவ்வொரு அரசின் அணுகுமுறைகளுமே இந்த இரண்டு விடயங்களையும் தீர்மானிக்கின்றன என்றால் மிகையில்லை. 2019-20 ஆம் நிதி ஆண்டிலிருந்து 2021-22 ஆம் நிதி ஆண்டு வரை கோவிட் பெருந்தொற்று காரணமாக அரசாங்கத்தின் செலவு பெரிதும் அதிகரித்திருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். எல்லா அரசாங்கங்களினதும் பொதுவான நோக்கமென்பது செலவுகளைக் குறைப்பதெனினும், எந்தச் செலவுகளை குறைத்திருக்கின்றனர் மற்றும் எந்தச் செலவுகளை மிகவும் அதிகரித்திருக்கின்றனர் என்று ஆராய்ந்து பார்த்தோமானால் அவர்களுக்கிருக்கும் , மக்களின் நலன் மேலுள்ள அக்கறை குன்றின் மேலிட்ட விளக்கு போல் நமக்கு தெள்ளத்தெளிவாக விளங்கும். ஒவ்வொரு வருடமும் பாதுகாப்பிற்காக ( ராணுவம் ) ஒதுக்கப்படும் நிதி அளவு கணிசமாக உயர்ந்து வருவதும்,கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதும் வேதனை தரும் விடயமாகும்*

| நிதி ஆண்டு | வருவாய் (பில்லியன் $) | செலவீனம் (பில்லியன் $) | நிகர செயல்பாட்டிலுள்ள இருப்பு($b) |
|---|---|---|---|
| 2012-13 | 515.8 | -539.3 | -23.5 |
| 2013-14 | 537.5 | -562.8 | -25.3 |
| 2014-15 | 554.5 | -581.8 | -27.3 |
| 2015-16 | 576.0 | -598.5 | -22.5 |
| 2016-17 | 607.7 | -621.3 | -13.6 |
| 2017-18 | 655.2 | -645.0 | 10.2 |
| 2018-19 | 694.0 | -677.5 | 16.6 |
| 2019-20 | 681.6 | -789.7 | -108.1 |
| 2020-21 | 728.0 | -873.5 | -145.5 |
| 2021-22 | 831.4 | -865.9 | -34.6 |

நன்றி - ஆஸ்திரேலியா புள்ளியியல் கழகம்




*இதுநாள் வரை கூட்டணிக் கட்சிகளின் பத்திரிகையாளர் சந்திப்புத் திட்டங்களைப் பார்த்து ( எந்தவித போதிய பணம் இருப்பிலின்றி வெறும் அறிவிப்பு மட்டும் ) ஏமாந்து போன மக்களுக்கு என்னென்ன திட்டங்களையெல்லாம் ஜிம் வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை. வருகின்ற மே 9 அன்று நமக்கு மொத்த விபரமும் தெரியவரும்.இந்த இதழ் உங்கள் கைகளுக்கு வருமுன்னரே உங்களுக்கு தெரிந்த பழைய செய்தியாகிவிடும். இதுவரை செய்த அறிவிப்புகள் படி நிதிநிலைவரத் திட்டத்தில் என்னவெல்லாம் இருக்கலாம் என்பதை தொகுத்திருக்கிறேன்.*

(22ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# வெடுக்குநாறிமலை: அடுத்தது என்ன?

ஜெரா

வவுனியா வடக்கின் எல்லைக் கிராமமான ஒலுமடு பகுதியில் அமைந்திருக்கும் வெடுக்குநாறிமலையின் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பிரச்சினை ஒருவாறாக முடிவுக்கு வந்திருக்கின்றது. கடந்த 27 ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட அனுமதியின் பிரகாரம், அழிக்கப்பட்ட சைவ சமயத்திற்குரிய சிலைகைளை மீண்டும் நிறுவி, தமிழ் மக்கள் ஆலயச்சூழலில் வழிபாடுகளை ஆற்றத்தொடங்கியிருக்கின்றனர். முன்பைவிட அதிகளவிலான மக்கள் மீண்டும் ஆலயத்தை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். எல்லைக் கிராமத்திலிருக்கின்ற தமிழர்களது தொன்ம ஆலயம் குறித்துப் பரவலாகப் பேசத் தொடங்கியிருக்கின்றனர்.

### வரலாறு

இவ்வாலயம் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னரே தமிழர்கள் மத்தியில் தெரிய வந்ததாயினும், இதன் வழிபாடு தொடங்கி பல தலைமுறைகள் கடக்கின்றன. ஈழப்போர் தொடங்க முன்னரே வவுனியா வடக்கு பகுதியில் இருக்கின்ற எல்லைக் கிராமங்களை அழிக்கும் நோக்குடன் பெரும்பான்மையினத்தாரினால் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகளும், வன்முறைகளும், சொத்தழிப்புக்களும் இங்கு தமிழர்களை நிரந்தரமாகக் குடியிருக்க விடவில்லை. தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாகப் பூர்வீகமான தம் வாழிடங்களை விட்டுத் தமிழர்கள் அடிக்கடி இடம்பெயர வேண்டியிருந்தது. இதனால் இந்தக் கிராமங்களில் இருந்த பல ஆலயங்கள் பல ஆண்டுகள் பக்தர்களைக் காணாது கிடந்தன. இந்த எல்லைக் கிராமங்களை அபகரித்து சிங்களமயப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வந்த தரப்பினரும், முதலில் இங்கிருந்த ஆலயங்களைத்தான் குறிவைத்து அழித்தார்கள். எஞ்சிய ஆலயங்களில் புத்த பெருமானை வைத்து வழிபடத் தொடங்கினர். இந்தப் பின்னணியிலேயே வெடுக்குநாறிமலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமும் இதற்கு முன்பு பல தடவைகள் இனந்தெரியாத விசமிகளால் அழிக்கப்பட்டன. அழிக்கப்படும் ஒவ்வொரு காலத்திலும் எல்லைக் கிராம மக்கள் மீளவும் சிலைகளை நிறுவி வழிபடத் தொடங்குவது வழக்கமாகிப்போனது.

ஈழப்போர் 2009 ஆம் ஆண்டில் போர் மௌனிப்பு நிலைக்கு வந்தாலும் 2011 ஆம் ஆண்டு ஆண்டிலேயே மக்கள் மீளவும் தம் ஊர்களுக்குத் திரும்பினார்கள். கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அது நடந்தது. இந்த மூன்று தசாப்தங்களுக்குள் எல்லைக்கிராமங்கள் அனைத்துமே பெருவனமாகியிருந்தன. வீடுகள், ஆலயங்கள், பயன்தரு மரங்கள், பாடசாலைகள் என அனைத்துமே அழிந்திருந்தன. எனவே மீளவும் காடழித்துக் கழனிகளை உருவாக்க வேண்டிய தேவையிருந்தது. மக்கள் தம் காணிகள், வீடுகளைத் துப்பரவு செய்துகொண்ட பின்னர் மரபார்ந்த ஆலயங்களைத் துப்பரவு செய்யத் தொடங்கினார்கள். அவ்வாறே 2014 ஆம் ஆண்டு மீளவும் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தைத் துப்பரவு செய்து சிறியளவில் வழிபாடுகளை ஆற்றத்தொடங்கினர். 2016 ஆம் ஆண்டிலிருந்து பிரதேச செயலகத்தின் உதவியுடன் ஆலய வளாகத்தைத் துப்பரவு செய்து வருடாந்தத் திருவிழா, சிவராத்திரி போன்ற நிகழ்வுகளைப் பெரியளவில் செய்து வழிபடத் தொடங்கினர். அவ்வேளையில்தான், பிரதேச செயலகத்தில் பணியாற்றிய சில சிங்கள அரச ஊழியர்களுக்கு இவ்வாறானதொரு மலை இருப்பதும், அதில் ஆதித் தமிழ் பிராமி வரிவடிவில் கல்வெட்டொன்று இருப்பதும் தெரிய வந்தது. மலைகளையும், குகைகளையும், ஆதித் தமிழ் பிராமி கல்வெட்டுக்களையும் கண்டாலே அது சிங்கள பௌத்தர்களுக்குரிய இடம் என பொதுப்புத்தியில் பதிவாகியிருக்கும் அவர்களுக்கு, தமிழர்கள் ஆலயம் வைத்து வழிபடுவது குற்றமெனப்பட்டது. உடனடியாகவே, 'பௌத்தர்களின் பண்பாட்டு அடையாளம் ஒன்று தமிழர்களால் அழிக்கப்படுகிறது. அதனை உடனடியாகக் காப்பாற்றுங்கள் 'எனத் தொல்லியல் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்தார்கள்.

ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த போதிலும் குற்றவாளிகளைக் கண்டறிவதில் பொலிஸார் பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை. எனவே கிராம மக்களும், ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து வடக்கு, கிழக்கு தழுவிய பெரும் போராட்டம் ஒன்றை வவுனியா நகரில் நடத்தினர். இந்தப் போராட்டத்தோடு நிறுத்தாமல், இந்தியா உள்ளிட்ட பல நாட்டுத் தூதரகங்கள், வெளிநாட்டு அமைப்புகள், இராஜதந்திரிகள் என அனைவரின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர். நாடாளு மன்றத்திலும் விவாதப் பொருளாகியது. இதனால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக வருடக் கணக்கில் நீடித்த ஆலயம் தொடர்பான வழக்கை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

ஆயினும் தொல்லியல் திணைக்களத்தினால் சட்டரீதியாக எதனையும் செய்ய முடியவில்லை. ஏனெனில் அப்படியொரு இடம் இருப்பதும், அவ்விடத்தில் தொல்லியல் எச்சங்கள் இருப்பதும் அப்போதுதான் தொல்லியல் திணைக்களத்திற்குத் தெரியும். இலங்கையின் தொல்லியல் இடமாகப் பிரகடனம் செய்யும் வர்த்தமானி கூட வெளியிடப்பட்டிருக்கவில்லை. இதனால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும் எவ்வித அதிகாரமும் தொல்லியல் திணைக்களத்திற்கு இருக்கவில்லை. எனவே பொலிஸாரைக் கொண்டு, ஆலய நிர்வாகத்தினர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தார்கள். தொல்லியல் சின்னங்களைச் சிதைத்தனர் என்கிற குற்றச்சாட்டின் கீழ் ஆலய பூசகர் உள்ளிட்ட பரிபாலன சபையைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் முன்வைத்த வாதங்களையடுத்து, அவ்வழக்கு நடத்தப்பட்ட விதமே தவறெனக் கருதி, உண்மையான குற்றவாளிகளைப் பொலிஸாரைக் கண்டுபிடிக்கும்படி தெரிவித்து, சிறையிலடைக்கப்பட்டவர்களை விடுவித்தது நீதிமன்றம். அத்தோடு ஆலயத்தில் பூசை உள்ளிட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்து செய்யவும் தடையில்லை எனத் தெரிவித்தது. நீதிமன்றம் அவ்வாறு சொன்ன போதும், கடந்த மாதம் வரைக்கும் ஆலயத்தில் பூசை வழிபாடு செய்ய பொலிஸார் அனுமதிக்கவில்லை. வழக்கு இருப்பதனால் யாரும் செல்லமுடியாதெனத் தெரிவித்துத் தமது கட்டுப்பாட்டின் கீழ் ஆலயத்தை வைத்திருந்தனர். இவ்வாறு பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் ஆலயம் இருந்த வேளை கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இனந்தெரியாத விசமிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. வைக்கப்பட்டிருந்த அனைத்து சிலைகளும் அடித்து நொருக்கப்பட்டிருந்தன.

இது குறித்து உடனடியாகவே ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தபோதிலும் குற்றவாளிகளைக் கண்டறிவதில் பொலிஸார் பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை. எனவே கிராம மக்களும், ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து வடக்கு, கிழக்கு தழுவிய பெரும் போராட்டம் ஒன்றை வவுனியா நகரில் நடத்தினர். இந்தப் போராட்டத்தோடு நிறுத்தாமல், இந்தியா உள்ளிட்ட பல நாட்டுத் தூதரகங்கள், வெளிநாட்டு அமைப்புகள், இராஜதந்திரிகள் என அனைவரின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர். நாடாளுமன்றத்திலும் விவாதப் பொருளாகியது. இதனால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக வருடக் கணக்கில் நீடித்த ஆலயம் தொடர்பான வழக்கை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு ஏற்பட்டது. அதன்படி கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற வழக்கில், பழையபடி ஆலயத்தில் சிலைகளை வைத்து, வழிபாடுகளை இயற்றலாம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

### இனி என்ன நடக்கும்?

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விடயத்தில் இனிமேல்தான் பிரச்சினையே ஆரம்பிக்கப்போகிறது என்கிற சூழல் உருவாகிவருகின்றது. தொல்லியல் என்கிற பெயரில் வடக்கு, கிழக்கில் புத்தர் சிலைகளை வைத்து பௌத்தமயமாக்குவதற்கு வழமையான பொறிமுறை ஒன்றை பௌத்த பிக்குகள் வைத்திருக்கின்றனர். கிழக்கு மாகாணம் தொடங்கி குருந்தூர்மலை வரைக்கும் அந்தப் பொறிமுறையின்படியே இயங்கி அவ்விடங்களை அபகரித்தனர். அந்தப் பொறியிலிருந்து தப்பித்திருப்பது வெடுக்குநாறிமலை மாத்திரம்தான். அதற்குப் பிரதான காரணம் இந்த மலைப்பகுதி இன்னமும் தொல்லியல் இடமாக வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படாமைதான். இவ்வளவு காலமும் இந்த இடம்தொடர்பில் நீடித்த நீதிமன்ற வழக்கு அதற்குத் தடையாக இருந்தது. எனவே இனி விரைவாகவே தமிழர் பிரதிநிதிகள் யாரும் நாடாளுமன்றத்தில் இல்லாத நேரம்பார்த்து, வெடுக்குநாறிமலையை பௌத்த தொல்லியல் இடம் எனக் கோரும் வர்த்தமானியொன்றைப் பிரகடனம் செய்வார்கள். அதனை வைத்துக்கொண்டு, அவ்விடத்தில் பௌத்த விகாரையை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகும்.

அதற்குக் கட்டியம் கூறும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை பௌத்த பிக்குகள், சிங்களப்பேராசிரியர்கள் ஊடகங்கள் வாயிலாக செய்துவருகின்றனர். 'வடக்கில் இருக்கும் பௌத்த மரபுரிமை சின்னங்கள் தமிழ் அடிப்படைவாதிகளால் அழிக்கப்படுகின்றது. எனவே அதனைத் தடுக்க அரசு, தொல்லியல் திணைக்களம், இராணுவம், பொலிஸார் தடுக்கத் தவறிவிட்டனர். எனவே சிங்கள மக்கள் திரண்டெழுந்து இப்பகுதிக்கு வருகைதந்து சிங்களப் பாரம்பரியத்தைக் காக்க வேண்டும்' என்ற விடயங்களை முன்னிறுத்தி கடுமையான பரப்புரை ஊடகங்கள், சமூக வலைதளங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக பௌத்த சங்கங்களில் தலைமை மகாதேரர், இந்த இடத்தைக் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவசர கடிதம் எழுதியிருக்கின்றார். பிக்குகளின் நிகழ்ச்சிநிரலை மீறி செயற்படவே முடியாத தெற்கின் அரச அச்சாணி இந்த விடயத்தில் அவர்களுக்குச் சாதகமாகவே முடிவெடுக்கும். எனவே இனிவரும் நாட்களில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரருக்கு என்ன நடக்கும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ள முடியும்.

● சியாமளா யோகேஸ்வரன்

பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பொன்னியின் செல்வன் என்ற காலத்தால் அழியாத இலக்கியத்தின் இரண்டாம் பாகம் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. கல்கி அவர்கள் தனது கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு, கற்பனைப் பாத்திரங்களையும் கலந்து உருவாக்கிய சோழ வரலாற்றைக் கூறும் காப்பியமொன்றை ஐம்பது ஆண்டு காலமாக திரைப்படமாக எடுப்பதற்கு யாருக்கும் வராத துணிச்சல் மணிரத்னத்துக்கு வந்திருப்பதைப் பாராட்டியே ஆக வேண்டும். முதற்பாகத்தை விட இரண்டாவது பாகம் சிறப்பானதாக அமைந்திருப்பதில் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கவில்லை என்றே கூற வேண்டும்.

முன்பெல்லாம் வாசகர்கள் என்று அடையாளப்படுத்தினாலே 'பொன்னியின் செல்வன் வாசித்திருக்கின்றீர்களா?' என்று ஒரு விதமான சவாலான எதிர்க்கேள்வி கேட்பார்கள். இத்தனை தடவைகள் வாசித்திருக்கின்றோம் என்று சொல்லும் போதுதான் எதிர்க்கேள்வி கேட்டவர் எம்மை வாசகர் என்று ஏற்றுக் கொள்ளும் நிலையும் காணப்பட்டிருக்கின்றது. வாசிக்கப் பொறுமை இல்லாதவர்களுக்கு அப்படி என்னதான் பொன்னியின் செல்வனில் இருக்கின்றது என்ற விடையறியாத சந்தேகம் இன்றுவரைக்கும் ஆட்டிப்படைத்துக் கொண்டுதானிருக்கின்றது.

சோழர்களின் வரலாற்றையும், தமிழரின் சிறப்பையும் வெளிப்படுத்தும் ஒரு இலக்கியமாகவே, கல்கி அவர்களின் பொன்னியின் செல்வன் கருதப்பட்டது. அதை எக்காலத்திலும் அழியாத விதமாக, மாறி வரும் காலத்துக்கேற்ற வகையில் வருங்காலத்தினருக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தற்கொலைக்குச் சமானமான ஒரு முயற்சியை மணிரத்தினம் மேற்கொண்டு, கத்தி மேல் நடப்பது போன்ற ஒரு செயலை செய்திருக்கின்றார் என்ற ரீதியில் அவரை நிச்சயமாகப் பாராட்டியே ஆக வேண்டும். வெளியான ஒரு வாரத்துக்குள்ளாகவே பெரும் வசூலை அள்ளிக் குவித்திருக்கிறது 'பொன்னியின் செல்வன்' என்றால் அந்தப் பெயர் எம்மத்தியில் ஏற்படுத்தியிருக்கக் கூடிய மாயத்தைப் பற்றி விளக்க வேண்டிய தேவையில்லை.

எண்ணங்களை எழுத்தால் செதுக்கிய ஐந்து பாகங்களையும் இரண்டு பாகங்களாகத் திரையில் வடிப்பது என்பது அத்தனை இலகுவான காரியமில்லை. படத்தின் பிரமாண்டமும், ஆடையணிகளின் ஆடம்பரமும், காட்சியமைப்புகளும் திரைப்படத்துக்கும் கதைக்கும் அணி சேர்க்கின்றன என்பதையும் ஒத்துக் கொண்டேதான் ஆக வேண்டும். மணிரத்தினம் என்றாலே பிரமாண்டம் என்ற உண்மையைப் போர்க்காட்சிகளிலும் அரண்மனைக் காட்சிகளிலும் தோட்டாதரணியின் வடிவமைப்புடன் அழுத்தமாகவே பதிவு செய்துள்ளார்.

இலங்கையிலிருக்கும் பொன்னியின் செல்வரை ஆதித்தகரிகாலரின் கட்டளைக்கேற்ப அழைத்து வர பல்லபேந்திரனும், கைது செய்து அழைத்து வரக் கட்டளைத் தளபதியும், சதியால் கொல்லவென பாண்டிய ஆபத்துதவிகளும் முயற்சி செய்வதாகவும், தாயகம் திரும்பும் போது நடுக்கடலில் புயற்காற்றில் வந்தியத் தேவனும் அருண்மொழித்தேவரும் அகப்பட்டுக் கொண்ட நிலையில் அவர்களின் கதி என்ன என்ற கேள்வியுடன் திரைப்படத்தின் முதற்பாகம் முடிவடைந்திருந்தது.

பொன்னியின் செல்வன் என்பது உண்மையில் அருண்மொழித்தேவரைக் (ஜெயம் ரவி) குறிப்பதானாலும் கல்கியின் புனைவின்படி கதை முழுவதும் ஊடாடியபடி உயிர்ப்புடன் வைத்திருப்பவர் வந்தியத்தேவன் (கார்த்திக்) தான். நாவலின் பெயருக்கேற்ப அருண்மொழித் தேவருக்கோ அல்லது வந்தியத்தேவருக்கோ அல்லாமல் திரைப்படத்தில் கரிகாலச்சோழருக்கே (விக்ரம்) அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது போன்ற உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது உள்ளது. அவரும் கொடுத்த பாத்திரத்துக்கு தனது ஒப்பற்ற நடிப்பால் நிறைவு சேர்த்திருக்கின்றார். ஒரு இளவரசருக்கேற்ற தோரணையும், அரச நடையும், மூர்க்கமும், போர்க்குணமும் என இருந்தவர் இறுதியில் காதலில் அத்தனையும் கரைந்து போய் கசிந்து நிற்பது என அவரின் நடிப்பைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியாது. தமிழ் திரைப்படக் கதாநாயகர்களில் முன்னணியில் இருப்பவர் என்ற வகையில் விக்ரமுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றே. நாட்டைப் பங்கு போட விரும்பாமல் மதுராந்தகருக்கு அரசுரிமையை விட்டுக் கொடுக்க முன் வந்த காட்சியிலும், நந்தினியைச் சந்திக்கும் போது வெறும் நடைப்பிணமான தன்னைக் கொன்று விடு என்று உருக்கமாக வேண்டிக் கொள்ளும் காட்சியிலும், தம்பி அருண்மொழியை உயிருடன் காணும் காட்சியிலும் விக்ரமின் நடிப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பொன்னியின் செல்வனின் கதையில் முக்கியத்துவம் பெற்ற சில முக்கியமான கதாபாத்திரங்களான சேந்தன், பூங்குழலி போன்றோர் திடீரென வந்து திடீரென மறைந்து போகின்றார்கள். குந்தவையிடம் தந்தையாரான சுந்தரச்சோழர் ஊமைராணிக்கும் தனக்கும் ஒரு தொடர்பு இருப்பது போன்று ஒத்துக் கொள்ளும் காட்சியின் மூலம் மணிரத்னம் ஒரு குழப்பத்தை உருவாக்கியிருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும்.




கற்பனைப் பாத்திரம் என்று சொல்லப்படும் நந்தினிக் கதாபாத்திரத்துக்குப் பேரழகியான ஐஸ்வர்யாராய் சரியாகவே பொருந்துகின்றார். அவரது அழகு உலகறிந்த ஒன்று என்றாலும், இந்தப் படத்தில் அவரது முகபாவங்களும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒப்பற்ற நடிப்பும் பொன்னியின் செல்வன் கதையை நகர்த்திச் செல்பவர் என்ற வகையில் படத்தில் மட்டுமல்லாமல் எம்மனங்களிலும் கதாநாயகியாகவும் நிறைந்து விடுகின்றார். கரிகாலச்சோழனுக்கும் நந்தினிக்கும் இடையேயான இறுதிப் பேச்சுவார்த்தைக் காட்சி மணிரத்னத்தின் முத்திரையில் மிக அற்புதமாக படைக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் சந்தித்த நிகழ்வும், வார்த்தைகள் தேவையின்றி ரசிக்கத் தக்க வகையில் அவர்களிடையேயான அன்பும் வெளிப்படுத்தப் பட்ட விதமும் படம் முடிந்த பின்னர் பொன்னியின் செல்வன் என்பது சோழகாவியம் என்ற உண்மையை மறந்து போக வைத்த காட்சிகளாகி விட்டன. நந்தினியைப் பற்றிச் சரியான கணிப்புக்கு வரும் முன்னரே மறைந்து போய் விட்டாலும் நினைவில் நின்று விடுகின்றார்,

குந்தவைக்கும் வந்தியத்தேவனுக்குமிடையேயான காதற்காட்சியில் மணிரத்னத்தின் கைவண்ணத்தையும், ரவிவர்மனின் ஒளிப்பதிவையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. குந்தவை படம் முழுக்க வந்தாலும் புதினத்தில் அவருக்கு இருந்த பாத்திரக் கனத்தை, திரைப்படத்தில் கொடுக்கவில்லை என்றே தோன்றியது. ஆனாலும் ஐஸ்வர்யாராயின் முகத்தில் தெரியும் முதிர்ச்சியுடன் ஒப்பிடும் போது திரிஷா பாத்திரத்துடன் பொருந்தி பாந்தமான அழகுடன் பெரிதும் ரசிக்க வைத்திருந்தார். ஒரு ராஜ கம்பீரத்துடன், அரச களை ததும்ப அவர் தோன்றிய காட்சிகள் சிலவாயினும் அவற்றைச் சிறப்பாகவே செய்திருந்தார்.

அரசுக்களுக்கிடையேயான போர் என்றில்லாமல், ஒரு குடும்பத்தின் அரசுரிமைக்கான போராட்டம் என்ற பொன்னியின் செல்வன் கருவைத் தாண்டி, திரைப்பட மசாலாவாக காதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. முழுமையில்லாத கதையமைப்பும், அங்குமிங்கும் தாண்டுவதான காட்சிகளும், அளவுக்கதிகமான பாத்திரங்களும் இருப்பதைத் தவிர்க்க முடியவில்லை. ஆழ்வார்க்கடியானாக ஜெயராமின் நடிப்பு முதற்பாகத்தில் பேசப்பட்டதொன்று. இரண்டாவதில் அவரையும் பெரிதாகக் காணவில்லை.

வந்தியத்தேவனாக 'கார்த்தி' அற்புதமாகவே தன் பாத்திரத்துக்கு சிறப்புச் சேர்த்திருக்கின்றார். ஆதித்த கரிகாலரிடமும் அருண்மொழித்தேவரிடமும் அவர் காட்டும் விசுவாசமான அன்பும், சண்டைக் காட்சிகளும் சிறப்பாகவே படமாக்கப் பட்டிருந்தன. அருண்மொழித்தேவராக ஜெயம் ரவி, யானையில் ஏறும் போது, அவர் வெளிப்படுத்திய கூர்ந்து நோக்கும் பார்வையுடனான நுட்பமாகச் சூழலை அவதானிக்கும் காட்சியும், இறுதியில் மணிமுடிக்கு உரிமையாளர் என்ற ரீதியில் தன் மகுடத்தை மதுராந்தகருக்கு விட்டுக் கொடுத்த காட்சியும் குறிப்பிடத்தக்கவை. நடிப்பில் குறை வைக்காவிடினும் பொன்னியின் செல்வன் என்று எம் மனதில் போட்டு வைத்திருந்த ஒரு உருவ அமைப்புடன் அவர் சரியாகப் பொருந்தவில்லை போன்றதொரு உணர்வு.

ஏ. ஆர் ரகுமானின் இசை படம் முழுக்க முத்திரை பதித்திருக்கின்றது. "அக நக" என்ற பாடலும், சின்னஞ்சிறு என்ற பாடலும் மனதில் நிறைந்து நிற்கின்றன. கட்டுமானம், கலை, கட்டடக் கலை, போர்க்கலை என்ற சோழரின் வரலாற்றை அப்படியே பிரதிபலிக்காவிடினும் ஒரு வரலாற்றுத்திரைப்படமாக மக்களைச் சென்றடைந்த விதத்தில் இந்தத் திரைப்படம் வெற்றி பெற்றிருக்கின்றது.

ஐந்து பாகங்களில் அழகாக வடிக்கப்பட்ட தமிழுக்கான ஒரு இலக்கியத்தில் இன்றும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் கதாபாத்திரங்களுக்கு மூன்று மணி நேரத்தில் மீள உயிர் கொடுக்கப்பட்டிருக்கின்றதா, இல்லையா என்பதை ரசிகர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் தொழில் நுட்பம் வளர்ந்து, வாசிப்பு அரிதாகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழரின் வரலாற்றைப் பதிவு செய்யும் வகையில் காலத்தின் தேவையாக உருவாகியுள்ள இந்தத் திரைப்படம் நிச்சயமாக ஒரு வெற்றிடத்தை நிரவும் என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையே. ஒரு இயக்குநராகக் காட்சியமைக்க கூடிய சம்பவங்களை மட்டுமே தெரிவு செய்ததன் மூலம் உண்மைக்கதையை அப்படியே பிரதிபலிக்க முடியாமல் போகும் என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றே.

அரசருக்கேயான கம்பீரமான அனல் பறக்கும் வீரவசனங்களைப் பேச்சுக்களை கேட்டுப் பழகி விட்ட எமக்கு ஜெயமோகனினது திரைக்கதை வசனங்கள் பெரிதாகப் பதியவில்லை. எத்தனை தடவைகள் கதையை வாசித்திருந்த போதும் மனதில் பதியாத சில உண்மைகள் திரைப்படத்தைப் பார்த்த பின்னர் அழுத்தமாக மனதில் பதிந்து விட்டிருக்கின்றன என்பதையும், பொன்னியின் செல்வன் கதையில் என்ன தான் இருக்கின்றது என்று தலையை உருட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு திருப்தியான ஒரு பதில் கிடைத்து விட்டிருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை.


2AUTOMATEANYTHING
ITS YOUR TIME TO TRANSFORM IN TO A TALENTED SOFTWARE ENGINEER IN JUST 6 MONTHS !!
JOB READY & INTERNSHIP TRAINING
GUARANTEE 100% GUARANTEE
2AutomateAnything, carefully designed this training for your career transformation !! We have done IT before for candidates from non-IT background and career breaks to transform their career in to IT with great salary ! Its your turn now !!
We offer :
Indepth Training & Experience
Hands on project experience
A great opportunity to get back to IT work
100% Placement Assistance
Training Streams :
Robotic Process Automation
Software Testing - Manual
Software Testing - Automation
Data Analyst & Business Intelligence
UiPath Partner REGISTERED
FREE TRIAL
SCAN ME
www.2automateanything.com/services/education/professional-transform-program
1300 032 566
+61 478 248 476
www.2automateanything.com


MCN Cakes
Sri Lankan Cakes, Sweets & Short Eats in Dandenong Plaza
Cakes
Cupcakes
Macarons
Finger Foods
Ethiroli Special Offer
10% OFF
Custom Cakes
*valid till 28/02/23 , conditions apply
Custom Cakes:
Birthday Cakes
Wedding Cakes
Engagement Cakes
Authentic Sri Lankan
Ribbon Cakes
Chocolate Cakes
Eclairs and more....
Shop 105, Level 1,
Food court (near Westpac)
Dandenong Plaza
Dandenong
(03) 90188188
/ 0433662477
mcnlittlefoods
இது எங்கட கடை

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஏன் ஆபத்தானது?

● சாம்பசிவம் ஹரிகரன்

இலங்கை ஜனநாயகத்தில் ஆழமான காயங்களை ஏற்படுத்தும் வலிமை மிக்க பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமொன்று இலங்கை அரசால் வர்த்தமானிப்படுத்தப்பட்ட செய்தி ஜனநாயகத்தை நேசிக்கும் மக்களிடையே பாரிய அச்ச உணர்வை அதிகரித்திருக்கின்றது. சர்வதேச அடிப்படை நியமங்களில் இருந்து மாறுபட்ட சட்டமென பல்வேறு தரப்புகளும் இச்சட்டமூலம் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்துவருகின்றன.

இந்த எதிர்ப்புகளின் விளைவாக இச்சட்டமூலம் குறித்த திகதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் இருந்து இலங்கை ஆட்சியாளர்கள் திடீரெனப் பின்வாங்கியிருப்பதனை காணமுடிகின்றது. ஆனாலும் எப்படியாவது இச்சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றும் கைங்கரியத்தில் இருந்து இலங்கை அரசு விலகியதாகத் தெரியவில்லை.

குறித்த சட்டமூலம் ஏப்ரல் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தாலும் அது சபையில் முன்வைக்கப்படாமல் - குறிப்பாக மீளப்பெறப்படாமல் -இருப்பது இச்சட்டமூலத்தை எப்படியாவது கொண்டு வரத்துடிப்பதற்கான சான்று என பல்வேறு மனிதவாதிகள் தெரிவித்து வருகின்றனர். இச்சட்டமூலத்திற்கான எதிர்ப்பினை சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச சக்திகளில் தொடங்கி இலங்கையின் சிவில் சமூகப்பிரதி நிதிகள் வரை கடுமையாக எதிர்த்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக இத்தகைய ஆபத்தான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்டால் அதன் முதலாவது கத்தி சிறுபான்மைச் சமூகம் மீது பாயும் என்ற அச்சத்தினை வெளிப்படுத்தி இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளின் பூரண கடையடைப்பு போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டதை காணலாம்.

ஆகவே இச்சட்டத்தின் அடிப்படை அமைப்பு மற்றும் உருவாக்கல் பொறிமுறைகள், விடயதானங்கள் எவ்வாறு சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு அப்பால் செல்கின்றன என்பது பற்றிய ஆய்வியல் பார்வையை இக்கட்டுரை செலுத்துகின்றது.

ஒரு சட்டமானது பிரஜைகளின் வெளி நடத்தைகளை கட்டுப்படுத்த சர்வதேசச் சட்ட உருவாக்க நியமங்களுக்கு உட்பட்டு முன்வைக்கப்பட வேண்டுமே தவிர அது மக்களின் சுதந்திரம், மக்கள் உரிமை, மக்களின் அரசியல் பங்குபற்றல், சமத்துவம், சுதந்திரம் , சட்டத்தின் ஆட்சி, சட்டத்தின்முன் சமனாக நடத்தப்படுதல் போன்ற சர்வதேச ஜனநாயக நியமங்களை புறந்தள்ளி அமைக்கப்படக்கூடாது. இது வளர்ச்சியடைந்த தாரண்மைவாத ஜனநாயகக் கருத்தியல் கோட்பாட்டின் சமூக நியமமாக இருக்கின்றது. ஆனால் இலங்கையை பொறுத்த வரையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இருக்குமாயின் அதை பயன்படுத்தி செய்வது அனைத்தும் சட்ட ரீதிக்கும் சர்வதேச நியமத்திற்கும் சமூக நீதிக்கும் உட்பட்டவை என்ற தவறான கற்பிதமாக இந்த உருவாக்கல் முயற்சி பல்வேறு தரப்பினரால் எடுத்து விளக்கப்படுகின்றது.

இச்சட்டமூலமானது 2023 ஆம் ஆண்டின் மார்ச் 17 ஆம் திகதி குறை நிரப்பி சட்டமூலமென அடையாளப்படுத்தப்பட்டது. பயங்கரவாதத்துக்கு எதிரானது என்ற சுலோகத்துடன் உருவாக்கப்பட்டதை காணலாம். இதன் முகவுரை பின்வருமாறு கூறுகின்றது.

‘பயங்கரவாதச் செயல்களிலிருந்தும் இலங்கையிலுள் அல்லது வெளியில் புரியப்பட்டவையும் பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளில் இருந்தும் பயங்கரவாதம் என்ற குறித்த தவறாக அமைகின்ற குறித்த செயல்களில் இருந்தும் இலங்கையின் பந்தோபஸ்தினையும் இலங்கை மக்களை பாதுகாப்பதற்கும், இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ் செய்வதற்கு இலங்கை மக்களையும் ஆள் புலத்தை பயன்படுத்தலைத் தடுப்பதற்கும், பயங்கரவாதத்துடன் இணைந்த செயலொன்றைச் செய்யும் ஆட்களை கண்டுபிடிப்பதற்கும் அடையாளம் காண்பதற்கும் பற்றுகைக்கு உட்படுத்துவதற்கும் தடுத்து வைப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் அவருக்கெதிராக குற்றவழக்கு தொடுப்பதற்கும் அவரை தண்டிப்பதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான சட்ட மூலமொன்று’ என இச்சட்டமூலம் அடையாளப்படுத்துகின்றது.

இச்சட்டமூலமானது ஏற்கனவே பல்வேறு தரப்புகளால் ஆபத்தானது என விமர்சிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தை நீக்கி புதிய ஒரு சட்டம் ஒன்றை உருவாக்கும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட சட்டமாக அமைகின்றது. ஆனாலும் இச்சட்டமூலம் ஏற்கனவே இலங்கையில் நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்ட ஏற்பாடுகளை விட மோசமான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி இருப்பதாக பல்வேறு சட்டத்துறை சார்ந்தவர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

குறிப்பாக சில ஏற்பாடுகள் ஏற்கனவே இருக்கும் பயங்கரவாத தடை சட்டப் பிரிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக வெளிப்படையாக காட்டியும் ஆகவே அதனை நீக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுமே இந்தச்சட்டமூலம் கொண்டு வரப்படுவதாக சர்வதேச தரப்புகளுக்கு இலங்கை அரசு உறுதியும் அளித்திருந்தது. ஆனாலும் இது உள்ளடக்க ரீதியில் அது மாற்றத்தை ஏற்படுத்தவில்லையென்றும் அதற்கு அப்பாலும் ஆபத்தான உள்ளடக்கங்களை கொண்டிருப்பதாக சட்டமூலத்தின் சில பிரிவுகள் தெளிவாகவே உணர்த்துகின்றன.

இச்சட்டமூலமானது ஏற்கனவே இருக்கும் சட்டமூலத்தினை விட ஒருபடி மேல் சென்று அடிப்படை உரிமை கோட்பாடுகளை புறந்தள்ளி செல்வதை காணமுடிகின்றது. ஏதேச்சையின்றி கைது செய்யப்படாமல் இருக்கின்ற உரிமை, சட்டத்தின் சமனான பாதுகாப்புக்கு உட்படும் இருக்கும் உரிமை, சட்டதினாலன்றி தண்டிக்கப்படாமல் இருக்கும் உரிமை, சித்திரவதைகள் கொடூரமான மனிதாபிமானமற்ற இழிவான நடத்தைக்கு உட்படாமல் இருக்கின்ற உரிமை, சமத்துவத்திற்கான உரிமை, மத ரீதியிலான உரிமை, ஒன்றுகூடலுக்கான உரிமை, தொழில் சங்கம் சார் உரிமை, அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான உரிமை, கருத்துக்களை வெளியிடுதலுக்கான உரிமை, சட்டத்தினாலன்றி கைது செய்யப்படுதல் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படுதலுக்கும் தண்டிக்கப்படாமல் இருக்கும் உரிமை, அரசியல் பங்குபற்றலுக்கான உரிமை என சர்வதேச மனித உரிமை பிரகடனமும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசும் வலியுறுத்தும் அடிப்படை உரிமை கோட்பாடுகளில் இருந்து முற்றாக வேறுபடுவதாக இச்சட்டமூலத்திற்கு எதிரான விமர்சனங்கள் அமைகின்றன.

இச்சட்டமூலமானது உலகில் வரையறுக்க முடியாத சொற்றொடருக்கான பயங்கரவாதம் எனும் சொற்றொடருக்கு நீண்ட வரைவிலக்கணத்தை வழங்க முற்படுகின்றதை காணலாம். அதன் ஒவ்வொரு வரைவிலக்கணப் பிரிவுகளையும் ஆய்வுக்கு உட்படுத்தினால் அடிப்படை உரிமையில் வழங்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகளையும் அதற்குள் இழுத்து வந்து பயங்கரவாதமாக சித்திரிக்கக்கூடியதாக இருக்குமென சட்ட நிபுணர்கள் வரையறுப்பதை காணலாம்.

அத்துடன் தெளிவற்ற சொற்றொடர்களை சட்டமூலம் பயன்படுத்துவது அவ்வாறு இழுத்து வருவதற்கான வாய்ப்பை இலகுவாக ஏற்படுத்தலாம் என விமர்சிக்கப்படுகின்றது. இதன் மூன்றாம் பிரிவின் முதலாம் பகுதியே இந்த உண்மையை வெளிப்படுத்த ஆதாரமாக முன்வைக்கப்படுகின்றது. அதன் முதலாம் பிரிவில் பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரை அச்சுறுத்தல் என குறிப்பிடுகின்றது.

இரண்டாம் பிரிவோ ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது விடுவதற்கு இலங்கை அரசாங்கத்தை அல்லது வேறேதேனும் அரசாங்கத்தை அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பை பிழையான முறையில் அல்லது சட்டமுறையற்ற முறையில் வலுக்கட்டாயப்படுத்தல் ஆகிய செயற்பாட்டை பயங்கரவாதமாக வரையறுக்கின்றது. இதன் படி சட்ட முறையற்ற என்பதற்கான பொருள் கோடலை சட்டத்தின் முன் வரையறுக்கமுடியுமாயினும் பிழையான முறையில் என்பதற்கான பொருள் கோடலை செய்வதற்குரிய சுதந்திரத்தை சட்டம் யாருக்கு வழங்குகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

இதன் பிறிதொருபகுதியில் அத்தியாவசிய சேவைகள் அல்லது வழங்குகைக்கு அல்லது அத்தியாவசிய சேவையுடன் அல்லது வழங்குகையுடன் இணைந்த ஏதேனும் முக்கியமான உட்கட்டமைப்புடன் அல்லது ஏற்பாட்டியல் வசதிக்கு பாரிய முட்டுக்கட்டையை ஏற்படுத்துதல் பயங்கரவாதச் செயலாக சட்ட மூலம் வரையறுக்கின்றது. அரசாங்கத்தின் சில முறையற்ற செயற்பாடுகளின் போது அவற்றுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்லுகின்ற போது வர்த்தமானி மூலம் அவற்றை அத்தியாவசிய சேவையாக்கி விட்டு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியதாக தெரிவித்து தொழிற்சங்கத்தரப்பை பயங்கரவாதத் தரப்பாக முத்திரை குத்த சட்டமூலம் வாய்ப்பை ஏற்படுத்துகின்றதா என்ற சந்தேகத்தை தொழிற்சங்க தரப்புகள் முன்வைத்திருப்பதையும் காண முடிகின்றது.

இதேவேளை இதன் பிறிதொரு பிரிவில் மதஞ்சார் கலாசாரஞ்சார் ஆதனங்களுக்கு சேதத்தை விளைவித்தல் என்பதன் கீழ் இன்று தொல்லியல் அத்துமீறலுக்கு எதிரானது என்ற பெயரில் பொதுமக்கள் நடத்தும் போராட்டங்களை கொண்டுவர வாய்ப்பை ஏற்படுத்துமா? என அண்மையில் தனியார் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் மனித உரிமை ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியிருந்தார். எனவே இவ்வாறு பல தெளிவற்ற பொருள் கோடல்களை சட்டமூலம் கொண்டிருப்பது பொதுமக்களின் அடிப்படை உரிமைகளின் அல்லது சட்டரீதியிலான உரிமைகளின் பாதுகாப்பில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என விமர்சிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இருக்கும் பயங்கரவாத தடை சட்டத்தில் காணப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பான ஏற்பாடுகள், நீதிவானொருவரின் தலையீட்டை அமுலாக்கல் பிரிவுகளிடம் ஏற்படுத்தல், பெண்களின் பாதுகாப்பு விடயத்தில் அக்கறை செலுத்தல், தடுப்புக்காவலுக்கான கால அளவு ஆகிய விடயங்களில் ஏற்படுத்தினாலும் சில ஏற்பாடுகளில் இதனை விட அதிகமான எல்லைக்கு சட்டமூலத்தின் பிரிவுகள் செல்வதை தெளிவாகவே அவதானிக்க முடிகின்றது.

ஏற்கனவே சட்டமூலத்தில் தடுப்புக்காவல் கட்டளைகளுக்கான கோரிக்கை அல்லது அனுமதி பாதுகாப்பு அமைச்சரிடம் அல்லது அமைச்சின் செயலாளருக்கு காணப்பட்டது. ஆனால் இச்சட்டமூலம் அதனை நாட்டில் இருக்கின்ற பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு வழங்குவது இச்சட்டமூலம் ஏற்கனவே இருக்கின்ற சட்டமூலத்தினை விட ஒருபடி மேல் செல்வதைக் காணமுடிகின்றது. தடுப்புக்காவல் விடயங்களில் நீதித்துறையின் தலையீட்டை ஏற்படுத்தினாலும் அந்த வலிமையற்ற தன்மை பொலிசாரும் நீதித்துறையின் தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய தரப்பாக மாற்றலாம் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. அத்துடன் கைது செய்தல் தடுத்து வைத்தல் என்பன சாதாரண சட்டப்பிரிவுகளுடன் முரண்படுவதாகவும் விமர்சிக்கப்படுகின்றது. சாதாரண சட்டங்கள் கைது செய்யப்பட்ட ஒரு நபர் நீதிமன்றிலோ அல்லது நீதிவான் முன்னிலையிலோ முற்படுத்துவதற்கான கால அளவை 48 மணித்தியாலமாக வரையறுக்க இச்சட்டமூலம் 72 மணி நேரமாக அதிகரித்தல் சித்திரவதைக்கு உட்படாமல் இருப்பதற்கான உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என விமர்சிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக தடுப்புக்காவல் விவகாரங்களில் ஜனாதிபதியின் செல்வாக்கினை அதிகரித்தல், தடுப்புக்காவல் நிவாரண சபையின் அங்கத்துவத்தில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நியமன உறுப்பினர்களின் செல்வாக்கை அங்கத்துவ ரீதியிலும் சட்டரீதியிலும் ஏற்படுத்துதல் ஆகியன அரசியல் வேட்டையாடல்கள், அரசியல் பழிவாங்கல் போன்ற செயற்பாடுகளிற்கு வழிவிடலாம் என்ற அச்சம் முன்வைக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக கடந்த காலங்களில் மக்கள் போராட்டங்களை சமாளிக்க அல்லது எதிர்கொள்ள அரசிற்கு சவாலை ஏற்படுத்தி அரசு முயன்று பின்வாங்கிய விடயங்களையும் இச்சட்டமூலம் உள்ளடக்கி இருப்பதாக விமர்சிக்கப்படுகின்றது. குறித்த இடமொன்றினை தடை செய்யப்பட்ட இடமாக அறிவித்தல், அங்கு நுழைவதற்கு பொதுமக்களிற்கு இருக்கும் சட்ட ரீதியிலான உரிமைகளை கேள்விக்குட்படுத்தல், தொழிற்சங்க உரிமைகளை சவாலுக்குட்படுத்தல் என பல விடயங்களை இச்சட்டமூலம் உள்ளடக்கி இருப்பதாக விமர்சிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஊடகக் கட்டுப்பாடுகளை விதித்தல் ஊடக சுதந்திரத்தில் தலையீடு செய்வதற்குரிய ஏது நிலைகளை நேரடியாக ஏற்படுத்துதல் ஆகியனவற்றையும் சட்டமூலம் கொண்டிருப்பதாக விமர்சிக்கப்படுகின்றது.

எனவே தொகுத்து நோக்கின் இச்சட்டமூலத்தின் ஏற்பாடுகள் சர்வதேச மனித உரிமை சமவாயங்கள் சர்வதேச மனித உரிமை நியமங்கள், சட்ட உருவாக்கல் தொடர்பில் சர்வதேச அடிப்படைகள் ஆகியவற்றிலிருந்து மாறுபடுவதாகவே அமைகின்றது. பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தல், பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல், பிரஜைகளின் உடல் நலம் என பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் முன்னுரையில் வலியுறுத்தும் விடயங்களின் அவசியம் மிக முக்கியமானதாயினும் அதற்காக ஆபத்தான சட்டமொன்றினூடாக அதனை அடைய முயல்வதாக கூறுதல் முரண் நிலையாகும். எனவே அப்படியான நோக்கங்களுடன் அரசாங்கம் இருக்குமாயின் சாதாரண சட்டக்கோவைகளில் திருத்தம் கொண்டு வந்து ஏற்பாடு செய்ய வழி இருப்பினும் இத்தகைய முடிவுகள் சட்டமூல உருவாக்கங்கள் ஏன் ஏற்படுத்தப்படுகின்றன என்ற வலுவான சந்தேகங்கள் அனைவர் மத்தியிலும் எழுகின்றன. உலகளாவிய ரீதியில் சட்ட உருவாக்க அமுலாக்க செயற்பாடுகளின் போது ஆபத்தற்ற நடைமுறை சட்டங்களினூடாக நிலைமையை கட்டுப்படுத்த முயன்று முடியாத போதே ஆபத்தான சட்டமரபுகளை கையில் எடுக்கும் போக்கு காணப்படுகின்றது. ஆனால் இலங்கை நீண்ட காலம் ஆபத்தான சட்டங்களால் நிர்வகிக்கப்பட்ட நாடு என்ற அடிப்படையில் ஜனநாயக விரோதமான இத்தகைய சட்ட உருவாக்க எண்ணங்கள் அல்லது சர்வதிகார அதிகார மன நிலை அரசியல் கலாசார மரபுகள் ஆட்சியாளர்களிடம் ஏற்படுதல் தவிர்க்க முடியாதவையே.

நடிகர் சிவகார்த்திகேயன் திரையுலகில் நுழைந்து புகழ் பெறுவதற்கு முன் ,விஜய் டி.வி யில் ‘அது இது எது’ என்ற நிகழ்ச்சி மூலம் மிகப்பிரபலம். அந்த நிகழ்ச்சியில் வரும் ’மாத்தியோசி ’எனும் பகுதியில் போட்டியாளர்கள் வெற்றி பெறுவது மிகக்கடினம். அதாவது கேட்கும் கேள்விகளுக்கு சம்பந்தமில்லாமல் தொடர்ந்து இரண்டு நிமிடம் வெவ்வேறான பதில்களைச் சொல்ல வேண்டும். சாதாரண மனிதனின் மூளையால் கேட்ட கேள்விக்கு தொடர்ந்து பதிலளிக்காமல் இருக்க முடியாது. அரசியல்வாதிகளின் மூளைகள் இதற்கு விதிவிலக்கு. அதிலும் சில குறிப்பிட்ட அரசியல்வாதிகள் ஜெகஜாலக் கில்லாடிகள். தமிழ் நாட்டைச் சேர்ந்த பழம்பெரும் அரசியல்வாதிகள் பெயர்கள் உங்கள் நினைவிற்கு வந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

இப்போதுள்ள ஆஸ்திரேலிய அரசியல் வாதிகளில் ’மாத்தியோசி ’நிகழ்ச்சியில் யார் பங்குபெற்றால் தொடர்ந்து வெற்றி பெறுவார் என்று எல்லோரையும் கேட்டால் ,கொஞ்சம் கூட யோசிக்காமல் நமது நினைவிற்கு வருபவர், வேறு யாருமல்ல, சாட்சாத் நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் Peter Dutton அவர்களே. எனக்குத் தெரிந்து இதுவரைக்கும் எந்தக் கேள்விக்கும் அவர் நேரிடையாகப் பதில் சொன்னதாகச் சரித்திரமில்லை. சமீபத்தில் ஒரு பேட்டியில் “ஏன் விக்டோரியா மாகாணத்தில் லிபரல் கட்சி தேய்ந்து கொண்டு போகிறது?” என்ற கேள்விக்கு ( David Speers ஆறு முறை திரும்பத் திரும்பக் கேட்ட போதிலும் ) கடைசி வரை பதில் அளிக்காமல், கேட்காத கேள்விக்கு அவர் பதில் சொன்னதை நாம் அவ்வளவு எளிதில் மறக்க முடியாது.



# உதிரியாகும் எதிர்க்கட்சி தலைவர்

லிபெரல் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான பீட்டர் டட்டனின் கடந்த கால அரசியல் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அவரின் திறமையின்மையையும் , குறுகிய / பிற்போக்கு மனநிலையையும் , எதேச்சதிகாரப் போக்கையும் அறிந்து கொள்ள முடியும். 1970 இல் ஐந்து குழந்தைகளில் மூத்த மகனாகப் பிறந்த அவர் ,சிறு வயதிலிருந்தே செய்தித்தாள் விநியோகம், புல்வெளிகளை வெட்டுதல், கசாப்புக் கடையில் வேலை செய்தல் போன்றவற்றைச் செய்து சம்பாதித்து தற்சார்புடன் வாழ்ந்திருக்கிறார் . அவர் தனது 18 ஆவது வயதில் யங் லிபரல்ஸில் சேர்ந்த ஒரு வருடம் கழித்து , குயின்ஸ்லாந்து மாநில லிட்டன் தொகுதியில் அவரது மாகாண சட்டமன்ற உறுப்பினராகும் முயற்சி தோல்வியடைந்தது.பிறகு குயின்ஸ்லாந்து பொலிஸ் படையில், பிரிஸ்பேன் புறநகர்ப் பகுதியில் உள்ள போதைப்பொருள் மற்றும் பாலியல் குற்றவாளிகள் குழுவில் துப்பறியும் நபராக சுமார் பத்து வருடங்கள் பணியாற்றினார்.

ஒரு விபத்திற்கு பிறகு காவல்துறை வேலையை உதறிவிட்டு, தனது தந்தையாருடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழிலில் இறங்கி பணம் சம்பாதிக்கிறார். ஓரளவு பணம் கையில் வந்தவுடன் ,எல்லோரையும் போல அரசியல் பிரவேசம் .2001 இல் குயின்ஸ்லாந்து டிக்சன் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்கிறார். தொடர்ந்து பல்வேறு துறை அமைச்சர் பதவிகளில் பணியாற்றிய பிறகு ,இரண்டு முறை தலைமைப் பதவிக்கான தேர்தலில் ( பிரதமர் பதவி ) போட்டியிட்டு தோல்வியுற்று மறுபடியும் ராஜாங்க மந்திரியாகப் பணிபுரிகிறார் . டட்டன் எந்த அளவிற்கு பிற்போக்கு வாதமும், நிறவெறியும், வெள்ளை இன மேட்டிமையும் கொண்டவர் என்பது அவர் குடிவரவுத் துறை அமைச்சராக இருந்தபோது அவரது செயல்பாடுகள் மூலம் நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். கடுமையான எல்லைக் கட்டுப்பாடு, அகதிகள் மறுவாழ்வுக்கு எதிரான மனநிலை, நிலையான வாழ்விற்காக உயிரைப் பணயம் வைத்து படகுகளில் வந்த கையறு நிலை அகதிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்கியது (மானஸ் தீவு அகதிகள் தடுப்பு முகாம் துப்பாக்கி சூடு ) என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இது மட்டுமல்ல ஒரு அரசியல்வாதிக்கு இருக்க வேண்டிய சமநிலைப் போக்கு என்றுமே அவருக்கு இருந்ததில்லை.எத்துணை முறை மிகக் கீழ்த்தரமாக பேசிவிட்டு பிறகு மன்னிப்பு கேட்டிருக்கிறார் . அவரது மன்னிப்பு கோரிய சம்பவங்களை எழுத இந்த ஒரு கட்டுரை போதாது. அதற்காக தனிப் புத்தகமே போட வேண்டும். பொறுமை உள்ளவர்கள் அவரது விக்கிப்பீடியா பக்கம் சென்று படித்துக் கொள்க.உதாரணத்திற்கு ஒன்றிரண்டு சம்பவங்களைக் குறிப்பிடலாம். “மெல்பேர்ன் மக்கள் இரவு நேர ஆபிரிக்க கும்பல்களின் வன்முறை காரணமாக உணவு சாப்பிட வெளியே செல்வதில்லை. மேற்கு சிட்னியில் நடக்கும் எல்லாக் குற்றச் சம்பவங்களுக்கும் காரணம் லெபனான் முஸ்லிம் மக்களை குடியேற்றம் செய்ததே. தென் ஆபிரிக்காவில் வெள்ளை இன அழிவு நடப்பதால் அவர்களுக்கு ஆஸ்திரேலிய குடியுரிமை வழங்கி புகலிடம் தரவேண்டும்” என்று கூறி , பல சமயங்களில் இடக்கரடக்கல் என்னவென்றால் தெரியாத இவர் எப்படி ஒரு மிகப்பெரிய அமைச்சர் பொறுப்பில் இவ்வளவு காலம் இருந்தார் என்பது மிக ஆச்சரியம். அவரது காவல்துறை உத்தியோகம் தான் அவரைக் கொஞ்சம்கூட சகிப்புத்தன்மையற்ற , ஒற்றைப்பார்வையுடைய, வெள்ளையின மேட்டிமை போக்குடைய பழமைவாத மனிதராக மாற்றியிருக்கிறது என்றால் மிகையில்லை. 2020 ஆம் ஆண்டில் உலகை உலுக்கிய ஜார்ஜ் பிளாய்ட் கழுத்தின் மேல் காலை வைத்து நசுக்கி கொன்ற வெள்ளையினக் காவலரின் கண்களில் தெரிந்த வெறிக்கும்,இனவெறி பிடித்த பிற்போக்கு குறுகிய மனப்பான்மை கொண்ட டட்டனின் வார்த்தைகளில் தெறிக்கும் வன்மத்திற்கும் நாம் வித்தியாசம் எதுவும் காண முடியாது.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த 2022 தேர்தலில் லிபெரல்- நஷனல் கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற த் தேர்தலில் படுதோல்விக்கு பொறுப்பேற்று ஸ்கொட் மொரிசன் பதவி விலகிய பிறகு , எந்தப் போட்டியாளருமின்றி கட்சியின் தலைமையும் ,எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பழம் நழுவிப் பாலில் விழுந்து , அதுவும் நழுவி வாயில் விழுந்த மாதிரி டட்டனுக்கு கிடைத்தது. எழுத்தாளர் அசோகமித்திரன் ஒரு கட்டுரையில் “வரலாறு அளிக்கும் ஓர வஞ்சனை என்று ஒன்றுண்டு. அதாவது எந்தக் காலத்திலும் ஒரு வீரனுக்கு தான் வணக்கம் செலுத்தும்.” என்று குறிப்பிடுவார். வரலாறு சில சமயங்களில் ஒருவரை வீரனாக்க ,சில பேரை கோமாளிகளாக்கி விடும். அது போன்று நமது பிரதமர் அந்தனி அல்பானீஸூக்கு, கிடைத்த மாபெரும் பொக்கிஷம் நமது எதிர்க்கட்சித் தலைவராகிய டட்டன் என்று சொன்னால் அது மிகையன்று.

எதிர்க்கட்சித்தலைவராக டட்டன் பதவியேற்ற கடந்த 11 மாதங்களில் ஒரு எதிர்க்கட்சி தலைவராக என்ன சாதித்திருக்கிறார் என்றால், ஒன்றுமே இல்லை என்பது தான் மிகவும் வருத்தமளிக்கும் விஷயம். ஆனால் அவரின் சம்பளம் 85 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. எதுவுமே செய்யாமல் உங்களுக்குச் சம்பளம் வரவேண்டுமானால், ஒரு எளிய வழி ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி தலைவராகுவது தான். எந்த ஆதாரமே இல்லாமல் குற்றம் சாட்டுவது ( அலிஸ் ஸ்பிரிங்ஸ் பிரதேசத்தில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை அதிகரித்திருக்கிறது என்பன போன்று), மாகாணத் தேர்தல்களில் கட்சியைப் படுதோல்வி அடையச் செய்தது, விக்டோரியா மாகாணத்தில் லிபெரல் கட்சியின் கோட்டை எனப்படும் ஆஸ்டன் தொகுதி இடைத்தேர்தலில்படுதோல்விஎன்றுஅவரதுசாதனைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

இப்படி எல்லோரும் நம்மைக் குறை சொல்கிறார்களே ! என்ன செய்வது ? . கருத்துக்கணிப்பில் மக்கள் தலைவருக்கான வாக்கெடுப்பில் மிகவும் பின் தங்கி போனதால், யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போல் டட்டன் ஒரு முடிவெடுத்தார். அது வேறொன்றுமல்ல, ஆதிவாசிகளின் குரல் சம்பந்தபட்ட வாக்கெடுப்பில் நாங்கள் (லிபெரல் கட்சி) எதிர்ப்புத் தெரிவிப்போம் என்பதுதான்.. இதையொட்டி கட்சிக்குள்ளே மாபெரும் பிளவு வெடித்திருக்கிறது. பல முன்னணி அரசியல்வாதிகள் இந்த முடிவை வெளிப்படையாக விமர்சனம் செய்து, பூர்வகுடிகள் குரலுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றனர். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை போல முற்போக்குக் கூட்டணிக் கட்சி தேய்ந்து ஒரு குறுகிய , தீவிர வலதுசாரி ,பிற்போக்கு வாதக் கட்சி எனவும் படிப்படியாக மாறி வருகிறது. கட்சியின் கொள்கை, சித்தாந்தங்களில் சீர்திருத்தம் கொண்டுவருவேன் என்று வீரமுழக்கம் இட்ட டட்டன் , தடாலடியாக முடிவு எடுத்து கட்சியின் சமாதிக்கு வித்திட்டிருக்கிறார். மாறி வரும் ஆஸ்திரேலியா பல்வேறு கலாசாரங்கள் கலந்த, பலதரப்பட்ட மக்கள் கலந்த ஒரு பன்முகச் சமூகமாக மாறி வரும் வேளையில் குறுகிய, இனவெறி கொண்ட, செயல்திறனற்ற டட்டனின் தலைமையில் இளைய சமூகத்தினர் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதைக் கடந்த காலத் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கின்றன... இந்த நிலை தொடர்ந்தால் அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சியாக இருக்க கூட வாய்ப்பு இல்லாமல் போவதற்கு எல்லாச் சாத்தியக்கூறுகளும் உள்ளன. அதற்கு ஒரு காரணகர்த்தாகவும் மற்றும் ஒரே காரணமாகவும் இருப்பார் நமது டட்டன்.

நடிகர் ரஜினிகாந்த் அவர்களின் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பாபா படத்தின் இமாலயத்தோல்விக்கு பிறகு அவசர அவசரமாக ஜக்குபாய் எனும் தனது அடுத்த படத்தின் விளம்பரத்தை பத்திரிகைகளில் வெளியிட்டார். அந்தப் படத்தின் தலைப்பு (caption) வாக்கியம் “ ஆண்டவா, என்னை நண்பர்களிடமிருந்து காப்பாற்று, பகைவர்களை நான் பார்த்துக்கொள்கிறேன்” என்பது பெரும் பரபரப்பை அப்பொழுது ஏற்படுத்தியது. இப்போது நடந்து முடிந்த தேர்தல்களில் படுதோல்வி அடைந்த பிறகு, லிபெரல் கட்சித் தொண்டர்களின் பிரார்த்தனையாக “ ஆண்டவா, கட்சியை டட்டனிடமிருந்து காப்பாற்று, பகைவர்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்” என்பதாகவே இருக்கும்.





LEGAL STUDIES TUITION

YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR

FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com



**முருகேசு சந்திரகுமார் 1980 களின் முற்பகுதியிலிருந்து இனவிடுதலைக்கான ஆயுதப் போராட்ட அரசியல், ஜனநாயக நீரோட்ட அரசியல் எனத் தொடர்ந்து 40 ஆண்டுகளாக அரசியற் பயணத்திலிருப்பவர். ஒரு காலகட்டத்தில் அரசாங்கத்துடன் இணைந்தும் செயற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர். இரண்டு சந்தர்ப்பங்களில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்றப் பிரதிக் குழுத் தலைவராகவும் செயற்பட்டிருக்கிறார். பல்வேறு விமர்சனங்களின் மத்தியிலும் பின்வாங்காமல் தொடர்ந்தும் அரசியல் அரங்கில் நிற்கும் சந்திரகுமார், தற்போது சமத்துவக் கட்சியின் தலைவராகச் செயற்படுகிறார்.**

**இலங்கையின் கடந்த கால, சமகால, எதிர்கால அரசியலைக் குறித்தும் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் நிலைவரம் பற்றியும் 'எதிரொலிக்காக' அவருடன் பேசியதிலிருந்து...**

**நேர்கண்டவர் : அரவிந்தன்**



# நாட்டை அடகு வைக்கத் தயார்; ஆனால் சமாதானத்துக்கும் அதிகாரப்பகிர்வுக்கும் யாரும் தயாரில்லையே!

# கிருசாந்தி படுகொலையை மனித உரிமைகள் பேரவைக்கு கொண்டு சென்றது நானே!



**முருகேசு சந்திரகுமார்**

**கேள்வி: இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். உண்மையில் அதற்கான சாத்தியமுண்டா?**

**பதில்:** இதை அவர் நேர்மையாகச் சொல்கிறாரா இல்லையா என்பதே கேள்வி. அப்படி விசுவாசமாகச் சொன்னாலும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியற் சூழல் உண்டா என்பது அடுத்த கேள்வி. ரணில் விக்கிரமசிங்கவில் பொதுஜன பெரமுனவும் (ராஜபக்ஸக்களும்) பொதுஜன பெரமுனவில் ரணிலும் தங்கியிருக்கும் நிலைமைதான் இப்பொழுதுள்ள சூழல். இந்த நிலையில் ஜனாதிபதி விரும்புவதைப்போல இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? இது மட்டுமல்ல, எதிரணியில் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமாரவின் தேசிய மக்கள் சக்தி உட்பட எல்லாக் கட்சிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிர்நிலையில்தான் உள்ளன.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றால், அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்றால் மனநிலையில் மாற்றம் வேண்டும். அந்த மாற்றம் எங்கும் நிகழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை. இதனால்தான் ஜனாதிபதியின் தேசிய அரசு அமைக்கும் திட்டம் நிகழ மறுத்துக் கொண்டிருக்கிறது.

**கேள்வி: அப்படியென்றால் இனப்பிரச்சினைக்கான தீர்வு இப்போதைக்கு இல்லையா?**

**பதில்:** இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தனியொருவருடைய விருப்பத்தினால் நிறைவேறக் கூடியதல்ல. அதற்குப் பல தரப்புகளும் இணைந்து நிற்க வேண்டும். அல்லது ஒருமுகப்பட்டுச் செயற்பட விளைய வேண்டும். அதற்கான சூழல் இன்னும் உருவாகவில்லை. சிங்களத் தரப்பில் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம் தரப்புகளிடத்திலும் இல்லை. இது கவலைக்குரியது.

உண்மையில் போரின் முடிவுக்குப் பின்னர் அந்தச் சூழல் உருவாகியிருக்க வேண்டும். சர்வதேச சமூகமும் அதையே எதிர்பார்த்தது. அதனையே அது வலியுறுத்தியது. பகை மறப்பு, நல்லிணக்கம், நிலைமாறு காலகட்ட நீதி, சமாதானம், அமைதித்தீர்வு என்று இதைப் படிநிலைப்படுத்திச் செயற்படுத்த விளைந்தது. அதாவது போரின் அழிவுகள் உண்டாக்கிய படிப்பினைகளின் வழியாக போருக்குப் பிந்திய அரசியலை Post – War Politics ஐ. இதற்காக அரசாங்கத்தையும் பிற அரசியற் சக்திகளையும் அது வலியுறுத்தியது. இந்த அடிப்படையிலேயே ஊடகங்களையும் சமூகச் செயற்பாட்டியக்கங்களையும் புத்திஜீவிகளையும் அரசியல் கருத்துப் பரப்புநர்களையும் அது வழிப்படுத்தியது. ஆனால், எல்லாத் தரப்புகளும் சர்வதேச சமூகத்தையே ஏமாற்றி விட்டு தத்தமது இனவாத அரணிலேயே தொடர்ந்தும் கொதிக்கும் சுடுகலன்களோடு நிற்கிறார்கள். எந்தத் தரப்பும் போருக்குப் பிந்திய அரசியலை (Post – War Politics) முன்னெடுக்கவில்லை. இந்த நிலையில் தீர்வை எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஆனால், ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு நடைமுறைச் சாத்தியமான சில விடயங்களை மேற்கொள்ள முடியும். குறிப்பாக மாகாணசபைக்குரிய அதிகாரங்களை முழுமையாக வழங்கவும் நடைமுறைப்படுத்தவும் முடியும். இது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்நிபந்தனையாக - நற்சமிக்ஞையாக அமையும். ஏன் முதற்கட்டமாகக் கூட அமையலாம்.

ஜனாதிபதி இதைச் செய்ய முயற்சிக்க வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வில் உண்மையான நாட்டம் இருந்தால் இதைப்பற்றி அவர் சிந்திக்க வேண்டும்.

**கேள்வி: போருக்குப் பிந்திய அரசியலை (Post – War Politics) முன்னெடுப்பதற்கு ஏன் கட்சிகள் பின்னிற்கின்றன?**

**பதில்:** இனவாத அரசியலை முன்னெடுப்பது இலகுவானது. மக்களும் அதற்கே பழகியிருக்கிறார்கள். ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், அரசியற் கருத்துரைப்பாளர்கள் என எல்லோரும் ஒரே டெம்பிளேட்டிலேயே சிந்தித்தும் செயற்பட்டும் பழகி விட்டதைக் காண்கிறோம். இதில் மாற்றம் நிகழவில்லை. அதனால்தான் புதியவை எவையும் நிகழவில்லை. ஆகவேதான் போர் முடிந்த பிறகும் போருக்கு முந்திய நிலை நீடிக்கிறது. இன்னும் போர்க்கால நிலைவரமாகவே நிலைமை உள்ளது.

"எவ்வளவு ஆபத்துகளையும் நெருக்கடிகளையும் பேரிழப்புகளையும் தருவதாக இருந்தாலும் போரை நடத்துவது இலகுவானது. அந்தளவுக்குச் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது" என்பார்கள். போரில் கட்டளைகளே எப்போதுமுண்டு. அங்கே அதிகாரமே முழுநிலையாகத் தொழிற்படும். ஜனநாயகத்திற்கு இடமிருப்பதில்லை. சமாதானத்தில் அப்படியல்ல. சமாதானத்தின் அடித்தளமே அதிகாரத்தைப் பகிர்வது. ஜனநாயகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்றே அமையும். அதற்கு எல்லோரும் தயாராக இருப்பதில்லை. அப்படித் தயாராக இருந்தாலும் ஒரே நிலையில் இருக்க மாட்டார்கள்.

ஆகவேதான் சமாதானத்தை எட்டுவது எப்பொழுதும் கடினமானதாக உள்ளது. அதற்கு போரின்போது செய்யப்படும் வேலையை விடப் பலமடங்கு வேலை செய்ய வேண்டும். பல மடங்கில் நிதியையும் காலத்தையும் செலவழிக்க வேண்டும். அதொரு நீண்ட, ஓயாத செயற்பாடாகும். அப்படிச் செயற்பட்டால்தான் வெற்றி கிட்டும். இந்த அடிப்படையில் மெய்யாகவே சமாதானத்துக்காக தம்மை அர்ப்பணித்த ஒரு கட்சியையோ தலைமையையோ சொல்லுங்கள் பார்க்கலாம்.

இலங்கையில் சமாதானத்திற்கான காலமும் சூழலும் கனிந்திருந்தது. அதைக் காயடித்து நாசமாக்கி விட்டன இந்தக் கட்சிகள். இதில் மக்களுக்கும் பொறுப்புண்டு. இனவாதத்தினால் பட்ட துயரங்கள் போதும் என்பதை மக்கள் உணர்ந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி உணராமல் இனவாத சக்திகளின் பின்னாலேயே மக்கள் தொடர்ந்தும் நிற்கிறார்கள். இது துரதிர்ஷ்டமான நிலையாகும்.

இன்றைய பொருளாதார நெருக்கடி இதை இன்னும் துலாம்பரமாகக் காட்டுகிறது. இனரீதியாகப் பிரிந்து பிளவுண்டு நின்றாலும் எல்லோரும் எரிபொருளுக்கும் அத்தியாவசிய தேவைகளுக்கும் ஒன்றாகவே தெருவில் நிற்க வேண்டிய நிலை. இரவும் பகலும் இவற்றைப் பெறுவதற்காக அலைய வேண்டும். மின்சாரமின்றி இருளில் மூழ்கிக் கிடக்க வேண்டும். இந்த நிலையிலும் ஆளையாள் பார்க்க முடியாமல் முகங்களைத் திருப்பிக்கொள்வது என்றால் இதை விட சிறந்த படிப்பினை வேறு என்ன? இதை விட முட்டாள்தனம் வேறிருக்கிறதா?

இதெல்லாம் தவறு என்று தெரிந்து கொண்டும் எல்லோரும் இனவாத அரண்களிலேயே போர் வீரர்களைப் போல வீறாப்பாய் நிற்கிறார்கள் என்றால் எப்படி போருக்குப் பிந்திய அரசியலை இவர்களால் முன்னெடுக்க முடியும்?

போருக்குப் பிந்திய அரசியல் (Post – War Politics) என்றால் சமாதானத்தில் பற்றுக் கொண்டு உறுதியாகச் செயற்படத் துணிய வேண்டும். தென்னாபிரிக்காவில் அதைத்தான் நெல்சன் மண்டேலா செய்தார். அவர் சொன்னார், "கடந்த கால அநீதியின் வரலாற்றை திருத்தியமைப்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதே மீளிணக்கம் அல்லது பகை மறப்பாகும்" என.

அதனால்தான் அந்தப் படிப்பினையை அறிந்து கொள்வதற்கென்று இலங்கையிலிருந்து பேச்சுவார்த்தைக் காலத்தில் விடுதலைப்புலிகளின் அணியினரும் அரசாங்கப் பிரதிநிதிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர். அதற்குப் பின்னர் இலங்கையின் அரசியற் கருத்துரைப்பாளர்களும் ஊடகத்துறையினரும் அரசியற் தரப்பினரும் அழைத்துச் செல்லப்பட்டு - அந்தப் படிப்பினைகளைக் கற்கச் செய்யப்பட்டனர். ஆனால், எந்த நல்விளைவும் கிட்டவில்லை. இது நிலைமாறு காலகட்ட அரசியலோ நீதி முறையோ முன்னெடுக்கப்படாமல், நிலைமாறா அரசியலையும் நீதி முறையையும் முன்னெடுக்கும் காலமாகவே உள்ளது.

**கேள்வி: அப்படியென்றால் இதை எப்படி மாற்றி அமைப்பது? அதாவது போருக்குப் பிந்திய அரசியலை (Post – War Politics) எப்படி முன்னெடுப்பது?**

**பதில்:** அதற்கு தாம் முன்னெடுக்கும் அரசியலை மக்களுக்குரியதாக - சேவைக்குரியதாக உணர வேண்டும். அப்படிக் கடைப்பிடிக்கத் துணிய வேண்டும். அதன் மூலமே மாற்றங்கள் நிகழும். ஆனால், இங்கே நடந்து கொண்டிருப்பது அப்படியல்ல. இது கட்சி நலன் அரசியல். இந்த அரசியலில் கட்சிகளின் நலனும் தலைவர்களின் நலனுமே முன்னுரிமைப்படுகிறது. மக்கள் நலன் அல்ல. அதாவது அரசியலானது மக்கள் நலனுக்கானது, அவர்களுக்கான சேவை என்ற நிலையை மறுத்து, அதைக் கட்சிகளின் நலனுக்காகவும் தலைமைகளின் நலனுக்காகவும் தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வது என மாற்றப்பட்டுள்ளது. இதற்கு ஊடகங்களும் கருத்துரைப்பாளர்களும் ஒத்துழைக்கிறார்கள். அல்லது சேர்ந்து இயங்குகிறார்கள்.

இதனால் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகிறார்கள். சுதந்திர இலங்கையில் வளர்ச்சி நிகழ்ந்திருக்கிறா? தேய்மானம் நிகழ்ந்திருக்கிறதா என்பதை இலங்கையின் இன்றைய நிலை நிரூபிக்கிறது. நாட்டை இருளிலும் தெருவிலும் நிறுத்தியுள்ளமை இதற்குச் சான்று.

இதற்கெல்லாம் காரணம் என்ன? மாற்றமுறா அரசியல் சிந்தனையை - உழுத்துப் போன பழைய அரசியலை -அப்படியே கொண்டிழுப்பதாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று ஜனாதிபதி சொல்வதொன்றும் புதியதல்ல.இதைத்தான் முன்பு இருந்த தலைவர்களும் சொல்லிக் காலத்தைக் கடத்தி, தமது ஆட்சியை நடத்தினார்கள். இந்த வகையில்தான் அரசாங்கத்தை நம்ப முடியாது என்று தமிழ்த்தரப்புச் சொல்வதும் நடக்கிறது. இதுதானே கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கிறது.

ஆகவே புதிய அரசியலை, காலப்பொருத்தமான அரசியலை, எதிர்காலத்துக்குரிய அரசியலை முன்னெடுக்கும் நவீன சிந்தனை உருவாகவில்லை. இந்த அரசியல் தலைவர்கள் தாங்கள் பயன்படுத்துகின்ற தொலைபேசியைப் புதிதுபுதிதாக (New Versions) மாற்றிக் கொள்கிறார்கள். ஏன் அவர்கள் பயன்படுத்திக் கொள்கிற வாகனங்கள் தொடக்கம் உள்ளாடைகள் வரையில் அவர்களுக்கு புதிய மாதிரிகளும் புதிய பதிப்புகளும் (New models and New Versions) தேவைப்படுகிறது. ஆனால், அரசியலில் மட்டும் பழசு!

காலம் கடந்த எதுவும் பயனற்றது. அவற்றைக் கழிவுக் கூடைக்குள் தள்ளி விட வேண்டும். கழிவுக் கூடைக்குள்ளிருப்பவற்றை எடுத்து நம் மேசையில் வைக்க முடியாது. அப்படி வைத்தால் அது முட்டாள்தனம். அந்த முட்டாள்தனத்துக்கு விலை கொடுத்துத்தான் ஆக வேண்டும். அந்த விலை கொடுப்புத்தான் இப்பொழுது நடக்கிறது.

**கேள்வி: நீங்களும் ஒரு அரசியற் கட்சியின் தலைவர். உங்களுடைய அரசியல் எப்படியானது? உங்களுடைய பயண வழி என்ன? போருக்குப் பிந்திய அரசியலை (Post – War Politics) எப்படி முன்னெடுக்கிறீர்கள்?**

**பதில்:** போருக்குப் பிந்திய சூழலில் சில மாற்றங்கள் நிகழும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் எனக்கும் இருந்தது. சர்வதேச சமூகத்தின் பரிந்துரைகள், ஆட்சியாளர்களிடத்திலும் பிற அரசியற் கட்சிகளிடத்திலும் அனுபவ ரீதியாக நிகழக் கூடிய மாற்றங்கள், மக்கள் தங்களுடைய பட்டறிவுக்கூடாகச் சிந்திப்பார்கள் என்ற நம்பிக்கை எல்லாம் புதியதொரு அரசியல் பரிமாணத்தையும் புதிய அரசியற் பாதையையும் உருவாக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், நம்பியதற்கும் எதிர்பார்த்ததற்கும் மாறாகவே நிலைமை இருந்தது. பழைய பாதையை விட்டு யாரும் நகர்வதற்குத் தயாராக இல்லை என்ற நிலையில், புதியதொரு அரசியலை தொடக்க வேண்டும் என்ற வேட்கையோடு சமத்துவக் கட்சியை ஆரம்பித்தேன். அதற்கு முன்பு இதைக்குறித்துத் தொடர்ச்சியாகப் பொது அரங்கிலும் நாடாளுமன்றத்திலும் பேசி வந்திருக்கிறேன்.

சமத்துவக் கட்சியானது, தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்ற சாதி, பால், பிரதேச, மத வேறுபாடுகளை முற்றாகவே எதிர்க்கிறது. தேசிய அடையாளத்தின் கீழ் அணிதிரள்வது என்பது அனைவருக்கும் உரிய இடத்தை - சமநிலையை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டுமே ஒழிய, உள்ளே பிரிப்புகளையும் பிளவுகளையும் வைத்திருப்பதல்ல. அது தமது மேலாதிக்க நோக்கத்துக்கு - வணிகத்துக்கு - மக்களைப் பயன்படுத்திக் கொள்வதாக இருக்கும். அப்படிச் செயற்பட்டபடியால்தான் இன்று தமிழ்த்தேசிய அடையாளத்தைப் பூசிக் கொண்ட கட்சிகள் உடைந்து சிதற வேண்டிய நிலை ஏற்பட்டது. உண்மையான தேசியம் என்பது உள்வாங்கும் தேசியவாதமாக (Inclusive Nationalism) கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடந்து கொண்டிருப்பதுவோ புறந்தள்ளும் தேசியவாதமாகவே (Exclusive Nationalism) உள்ளது.

ஆகவே எமது கட்சி இதற்கு மாறாக உள்வாங்கும் தேசியவாதத்தை (Inclusive Nationalism) மேற்கொள்ளக்கூடியதாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பரப்பில் நிலவும் சமத்துவமற்ற நிலையையும் ஜனநாயகக் குறைபாட்டையும் மாற்ற முற்படுகிறது. முஸ்லிம்களை அவர்களுடைய தனித்துவத்துடன் சமநிலையில் அணுக வேண்டும் எனக் கருதுகிறது. அதேவேளை இனரீதியாக மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறையை எதிர்த்து மறுதலிக்கிறது. அரச பயங்கரவாதத்தை கடுமையாக எதிர்க்கிறது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கான வழிமுறைகளையும் பொறிமுறைகளையும் பற்றிச் சிந்திக்கிறது. இதற்குச் சர்வதேச சமூகத்தினாலும் உள்நாட்டுச் சக்திகளாலும் புறக்கணிக்க முடியாத அரசியலை முன்வைக்கிறது. அனைத்துத் தரப்பினரும் ஏற்கக் கூடிய நியாயமான தீர்வையும் வாழ்க்கை நீதியையும் முன்னெடுக்கிறது.

**கேள்வி: இது ஒரு கற்பனையான அரசியலாகத் தோன்றவில்லையா? ஏறக்குறைய இதைப்போன்ற கோட்பாட்டு விளக்கங்களைத்தானே இடதுசாரிகளும் சொல்லி வருகிறார்கள். ஆனால், மக்கள் இதையெல்லாம் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லையே?**

**பதில்:** அப்படி உங்களுக்குத் தோன்றினால் நீங்கள் பிழையான இடத்தில் நிற்கிறீர்கள் என்றுதான் சொல்வேன். இதை விடச் சாத்தியமான வேறு வழியொன்றைச் சொல்லுங்கள். அந்த வழியை ஏன் யாரும் பின்பற்றாமலிருக்கிறார்கள்?

மற்றது , இடதுசாரிகளின் அரசியலில் பின்னடைவுகளும் தவறுகளும் உண்டு. நாம் அதைக் கடந்து சிந்திக்கிறோம்.

அனைவருடைய அரசியல் அபிலாஷைகளையும் உள்ளடக்கிய தீர்வுத்திட்டம் ஒன்று இலட்சியவாதத் தன்மையையே கொண்டிருக்கும். இலட்சியங்கள்தானே பல நடைமுறைகளைத் தோற்றுவித்துள்ளன. முதலில் விட்டுக் கொடுப்புகளோடும் ஏற்றுக் கொள்ளுதல்களோடும் சிங்கள, முஸ்லிம், தமிழ்த் தரப்புகள் ஒரு பொது மேசையில் அமர்ந்து பேசும் நிலை உருவாக வேண்டும். ஏனென்றால் அடிப்படையில் இது பேசித் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையே. ஆகவே அதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இது சாத்தியமா? எப்படிச் சிங்களத் தரப்பை நம்புவது என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். மிக மோசமான நிறவெறியிலிருந்தும் இன ஒடுக்குமுறையிலிருந்தும் தென்னாபிரிக்கா மீண்டு வந்திருக்கிறதல்லவா! அதற்கமைவான அரசியல் யாப்பு அங்கே உருவாக்கப்பட்டது. இதற்காகத்தான் மண்டேலா சொல்கிறார், "மக்கள் வெறுப்பதற்குக் கற்றுக் கொள்கிறார்கள். அப்படி அவர்களால் வெறுப்பதற்குக் கற்றுக் கொள்ள முடியுமென்றால், அதனை விட அன்பு செலுத்துவதற்கு நம்மால் கற்றுக் கொடுக்க முடியும். எதிர்ப்புக் காட்டுவதையும் விட அன்பு செலுத்துவதே மனித மனத்திற்கு மிக நெருக்கமானதும் இயல்பானதுமாகும்" என்று.

இதைப் புரிந்து கொண்டு செயற்படவில்லை என்றால் நிலைமை மேலும் மோசமடையும். இப்போது நாடு நிறுத்தப் பட்டிருப்பது கடன்பொறியின்மேலேதான்.

(20ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# காலிஸ்தான்: இந்து ராஷ்டிராவின் எதிர் வினையா?



● அ.பாக்கியம்

கடந்த பெப்ரவரி 17 ஆம் திகதி (17-02-23) பஞ்சாபில் உள்ள அஜ்னலா காவல் நிலையம், அம்ரித் பால் சிங் என்பவரின் தலைமையில் ஆயுதம் தாங்கியவர்களால் முற்றுகையிடப்பட்டது. பொலிஸாருடன் நடந்த கடும்மோதலுக்குப்பின், தன் உதவியாளர் லவ்பிரீத்தை காவல் நிலையத்திலிருந்து அம்ரித்பால் சிங் மீட்டுச் சென்றார். இந்த சம்பவத்தால் பஞ்சாப் கொதி நிலைக்குச் சென்றது. அம்ரித் பால் சிங் யார்? எனக் கேள்வி எழுந்தது. மீடியா வெளிச்சம் அம்ரித் பால் சிங் மீது விழுந்தது.

யார் இந்த அம்ரித் பால் சிங் (30)? வாரிஸ் பஞ்சாப் டே (பஞ்சாபின் வாரிசுகள்) என்ற அமைப்பின் தலைவர்தான் அவர். இந்த அமைப்பை உருவாக்கியவர் பஞ்சாப் நடிகரும் சமூக ஆர்வலருமான தீப் சித்து. டெல்லியில் மோடி அரசுக்கு எதிராக 2020 இல் விவசாயிகள் நடத்திய போராட்டத்தில் தீப் சித்து பங்கேற்றவர். 2021ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று செங்கோட்டையில் நடந்த மதக்கொடி ஏற்றிய நிகழ்வில் பங்கேற்றார். இவருக்கு தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருக்கிறது என்று சி.பி.ஐ. குற்றம்சாட்டி கைதுசெய்தது. 2 மாத சிறைவாசத்துக்குப்பின் வெளியில் வந்த தீப் சித்து, 2021 செப்ரெம்பரில் வாரிஸ் பஞ்சாப் டே என்ற அமைப்பை ஆரம்பித்தார். பிந்திரன் வாலேயை நான் பயங்கரவாதியாக கருதவில்லை என்று கூறிய இவர், காலிஸ்தான் ஆதரவாளராக இருந்த சிம்ரஞ்சித் சிங் மானுக்காக நாடாளுமன்ற இடைத்தேர்தலில் பணியாற்றினார். எதிர்பாராதவிதமாக தீப் சித்து ஒரு கார் விபத்தில் மரணம் அடைந்தார். இந்நிலையில்தான், துபாயில் வேலை பார்த்துவிட்டு 2022ல் திரும்பிய அம்ரித் பால் சிங், வாரிஸ் பஞ்சாப் டி அமைப்பின் தலைவராக, பிந்திரன்வாலேயின் சொந்த ஊரான ரோட் கிராமத்தில், அவர்கள் வழக்கப்படி தலைப்பாகை கட்டி முடி சூட்டிக் கொண்டார். அப்போது காலிஸ்தான் ஆதரவுக் கோஷங்கள் முழங்கப்பட்டன.

'பிந்திரன் வாலேதான் என் உந்து சக்தி' என்று அறிவித்த அவர், பிந்தரன் வாலேயைப் போலவே வெள்ளை அங்கி, நீல நிறத் தலைப்பாகை, நீளமான வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வலம் வந்தார். பஞ்சாப்பின் பொருளாதார, கலாசார நெருக்கடி, சீக்கிய மதத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்து போன்ற பிரசாரங்களை முன்னிறுத்தி இளைஞர்களைக் கவர்ந்தார். மத போதகர் என்ற முறையில் கிராமம், கிராமமாகச் சென்று போதைப் பழக்கத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்து இளைஞர்களை வசீகரித்தார்.

காலிஸ்தான் இயக்கத்தை வளரவிட மாட்டோம் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சுக்கு பதிலடி கொடுத்தார். 'இந்துத்துவவாதிகளுக்கு இந்துராஷ்டிரம் அமைக்க ஆசை இருக்கும் போது சீக்கியர்களுக்கு காலிஸ்தான் அமைக்க ஆசை இருக்காதா? வன்முறை இல்லாமல் எதையும் நிறுவ முடியாது. ஆயுதங்களை மகிமைப்படுத்துவது குற்றமல்ல. சீக்கிய மதத்திலும் பஞ்சாப்பின் கலாசாரத்திலும் இது பொதிந்து உள்ளது. சீக்கிய மதத்தை தனிமதமாக அங்கீகரிக்காத இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை என்னால் ஏற்க முடியாது' என்றும் அவர் கூறினார். அவருக்கு பரவலாக இளைஞர்களின் ஆதரவு கிடைத்தது. இதுபோன்ற இயக்கத்திற்கு இளைஞர்கள் மத்தியில் ஆதரவு கிடைப்பதற்கு காரணம் நவ தாராளமய காலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள்தான் என்பதை மறுக்க முடியாது.

பஞ்சாப் இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகும். இந்தியாவின் உணவுக் கூடை என்றும் அழைக்கப்பட்டது. பசுமைப் புரட்சி காலத்தில் 1967ஆம் ஆண்டு விவசாயிகளுடைய வருமானம் 70% அதிகரித்தது. 1974 ஆம் ஆண்டிலேயே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு பஞ்சாப்பின் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது. இந்தியாவின் நிலப்பரப்பில் 1.53 % உள்ள பஞ்சாப் கோதுமை உற்பத்தியில் 17%, நெல் உற்பத்தியில் 12 %, பால் உற்பத்தியில் 10% பங்களித்து வருகிறது. இவைதான் பஞ்சாப் முதன்மை மாநிலமாக இருந்ததற்கு அடிப்படை காரணம்.

ஆனால், 1980 ஆம் ஆண்டுகளுக்குப்பிறகு பஞ்சாப் நெருக்கடிகளைச் சந்திக்கத் துவங்கியது. குறிப்பாக நவதாராளமயக் கொள்கை 1992 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட பொழுது அதன் முதல் பலிகடாவாக பஞ்சாப் மாறியது. இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில் 1980 இல் முதல் மாநிலமாக இருந்த பஞ்சாப், 2020-இல் 16 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. தற்போது மாநிலத்தின் கடன் சுமை ஒட்டுமொத்த ஜிடிபி உற்பத்தியில் 50 சதவீதத்தை கடந்து உள்ளது.

நவ தாராளமயம் விவசாயத்தை வணிகமயமாக்கி சந்தைப்படுத்தலை நோக்கித் தள்ளியது. 2004 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு ஏக்கருக்கு 50 ஆயிரம் வரை கடன் கொடுத்ததை மாற்றி 3 லட்சம் வரை கடன் கொடுக்க வங்கிகள் தங்களது விதிகளை தளர்த்தினார்கள். சந்தைப்படுத்தலின் விளைவாக இடைத்தரகர்கள் இதில் மேலாதிக்கம் செலுத்தினர். இடுபொருள்களின் விலை ஏற்றமும், விளைபொருட்களின் விலைச்சரிவும் விவசாயிகளைக் கடன் சுமைக்கு ஆளாக்கியது. கடன் சுமையால் 2000-2018 இடைப்பட்ட காலத்தில் 9 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். நவதாராள மயத்திற்கு பிறகு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் தற்கொலைகள் சுமார் 20,000 என்று அதிகாரபூர்வமாகவே கணக்கிடப்பட்டுள்ளது. விவசாயிகள் தற்கொலையில் 88% கடன் சுமையால் நடந்தன.

கால்வாய்ப்பாசனம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. வணிகமய விவசாயத்தின் உந்துதலாலும், விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கிடைத்ததால் 14 லட்சம் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு அதலபாதாளத்திற்கு சென்றுவிட்டது. பஞ்ச (ஐந்து) நதிகள் கொண்ட பஞ்சாப் மாநிலம் வறட்சியை நோக்கித் தள்ளப்படுகிறது.

விவசாய நிலம் நச்சுத்தன்மை கொண்டதாக மாறி தனது வளத்தை இழந்தது. நிலத்தின் வளம் இழப்பால் விவசாயத்திற்காக காடுகள் அழிக்கப்பட்டு 33 சதவீதம் இருக்க வேண்டிய இடத்தில் 6 சதவீதம் மட்டுமே காடுகள் இருக்கின்றன.

வேலையின்மை அதிகரிப்பு, இயந்திர மயமாக்கல், பூச்சிக் கொல்லி, பணப்பயிர் அறிமுகம், வணிகமயம் என அனைத்தும் சேர்ந்து விவசாயத்தை அழித்து பஞ்சாப்பை நெருக்கடிக்கு உள்ளாக்கியன.

விவசாயப் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு மாறாக ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் நிர்வாகச் சீர்கேட்டிலும் லஞ்ச ஊழல் போன்றவற்றிலும் ஈடுபட்டு நிலைமையை மேலும் சீரழித்தனர். நவ தாராளமயத்தில் உருவான புதிய பணக்காரர்கள் அரசியல் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

மக்களின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு பதிலாக அகாலி தள கட்சி பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்து மாநிலத்தை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கியதால் மக்களிடமிருந்து தனிமைப்பட்டது. அதன்பிறகு ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் கட்சியோ மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அக்கறை காட்டாமல் இருந்தது. இதனால் மக்கள் ஆம் ஆத்மி கட்சியைத் தேர்வு செய்தார்கள். ஆம் ஆத்மி அரசின் ஓராண்டு கால செயல்பாடு மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

கிராமப்புற விவசாயிகள் தங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அதிக உணர்வு திறன் கொண்ட அரசியல் அமைப்பை எதிர்பார்க்கிறார்கள். அரசியல் வெற்றிடம் மாற்றைத் தேடுகிற பொழுது இளைஞர்கள் அம்ரித் பால் சிங் பின்னால் அணி திரளுகின்றனர். இந்த வெற்றிடத்தில் இருந்து தீவிரவாத சிந்தனைக்கு ஆதரவான போக்கு தென்படுகிறது. குறிப்பாக ஆம் ஆத்மி கட்சியின் முதல்வர் பகவந்த் மான், தன் எம்.பி. பதவியை ராஜினாமா செய்ததால் சங்ரூர் தொகுதியில் இடைத்தேர்தல் நடந்தது. அதில் காலிஸ்தான் ஆதரவாளராக இருந்த, சிம்ரஞ்சித் சிங் மான் வெற்றி பெற்றார். மூன்று மாதத்திற்கு முன்பு நடந்த சட்டமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்த இவர், அதன் பிறகு நடந்த எம்.பி. தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெறுகிறார் என்றால் பஞ்சாப் அரசியல் போக்கின் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த அரசியல் நெருக்கடியின் உண்மையான காரணங்களைப் புரிந்து கொள்ளாமல் பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் ஆம் ஆத்மி அரசைக் குறை சொல்வதும், பஞ்சாப்பில் நிலவும் சூழ்நிலைகளுக்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ போன்றவற்றை மட்டுமே காரணமாகச் சொல்லுவதும் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பாத நோக்கமாக உள்ளது.

பஞ்சாப்பின் சமூக நெருக்கடியும் இந்த விளைவுகளுக்கு காரணமாக அமைந்திருக்கிறது. 1980-90ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு கிடைக்காத நிலையில், டெல்லியில் சீக்கியப் படுகொலைகள் ஏற்படுத்திய ஆறாத தழும்புகள், ஆபரேஷன் ப்ளூ ஸ்டாருக்கு பிறகு நடந்த அத்துமீறல்கள் என அனைத்தும் மீண்டும் மீண்டும் எழுப்பப்படுகின்றன. சீக்கிய மத அமைப்புகள் பிளவுண்டு கிடப்பதால், ஆளுகிறவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். பா.ஜ.க. எழுப்பும் 'இந்தி இந்து இந்தியா' என்ற ஆக்ரோஷமான கோஷங்களால் சீக்கியர்களை இந்து மதத்தில் இணைத்துக் கொள்வார்கள் என் அச்சம் மேலோங்கி வருகிறது.

பஞ்சாப் பல்கலைக்கழக பேராசிரியரான மஞ்சித் சிங்" மீண்டும் சீக்கியத் தீவிரவாதத்திற்கான அரசியல் வெளி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள தீவிர சீக்கிய சித்தாந்தவாதிகள் இளைஞர்களிடையே உள்ள வெற்றிடத்தை நிரப்ப விரும்புகிறார்கள். அதில் ஒன்றுதான் வாரிஸ் பஞ்சாப் டே" என்கிறார்.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்று உரிமை கோரும் பொழுது காலிஸ்தான் இயக்கத்தை மட்டும் கட்டுப்படுத்துவது, சீக்கிய மதத்தை தனி மதமாக அங்கீகரிக்காமல் இருப்பதை எப்படி ஏற்க முடியும்? கடந்த எட்டு ஆண்டுகளாக இந்துத்துவப் பெரும்பான்மை அரசு முஸ்லிம்களை அடித்துக் கொல்கிறது் கிறிஸ்தவர்களை தனிமைப்படுத்துகிறது. நாடாளுமன்றமே மதக்கோஷங்களால் நிரம்பி வழிகிறது. இந்துராஷ்டரா போன்ற கோரிக்கைகளை அமுல்படுத்துவதற்கு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால்'இந்தி இந்து இந்தியா' என்ற இந்துத்துவவாதிகளின் ஆக்ரோஷம், காலிஸ்தான் வேண்டும் என்ற எதிர்க் கோரிக்கையைத் தூண்டி விட்டுள்ளது. இந்துத்துவ வாதிகள் இந்துராஷ்டிரத்தை கோரினால் சீக்கியர்கள் காலிஸ்தானைத் தேடுவதில் என்ன தவறு என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.


பஞ்சாப் தீவிரத்தன்மை கொண்ட அரசியலில் நிரந்தரத் தொடர்பு கொண்டு இருந்தாலும் அவற்றைப் பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை. வெகுஜன இயக்கங்கள் தான் பஞ்சாப்பின் மாற்றங்களில் அடித்தளமாக இருக்கின்றன. குறிப்பாக 1958- 59 இல் பஞ்சாப் அரசுக்கு எதிராக நடத்திய வரி எதிர்ப்பு இயக்கம், 2020 ஆம் ஆண்டுகளில் துவங்கிய விவசாயிகளின் போராட்டம் என பொதுமக்களின் இயக்கம் தான் பஞ்சாப்பின் போக்குகளைத் தீர்மானித்து உள்ளது.

இன்றைய தினம் காலிஸ்தானை அர்த்தப்படுத்துபவை பஞ்சாப்பின் பொருளாதார அரசியல் சமூக நெருக்கடிகளும் அதனால் எழக்கூடிய மக்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளும் தான். இவை வெகுஜன இயக்கங்களால் தீர்க்கப்பட வேண்டியவை. இதற்கான அரசியல் தீர்வை நோக்கி முன்னேற வேண்டும்.

இந்த நெருக்கடிகளை நீடிக்கச் செய்வதில் ஆளும் கார்ப்பரேட் இந்துத்துவா சக்தி விரும்புகிறது. "ஏகம்" என்பதை உருவாக்க இந்து ராஷ்ட்ரா என்ற கோரிக்கையை முன்வைக்கும் இந்துத்துவவாதிகளுக்கு மாற்றாக காலிஸ்தான், சீக்கிஸ்தான் போன்ற கோரிக்கைகள் எழத்தான் செய்யும். இவ்வாறு பிளவுபடுவதை ஆளுகிறவர்களும் விரும்புகிறார்கள். மக்களை மோதவிட்டு அரசியல் செய்வதுதான் அவர்களின் வாடிக்கை.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

# தமிழின் தொன்மமும் மாறும் வாழ்வியலும்





A.R.V.லோஷன்

அண்மைய நாட்களில் தொன்மம், தொல்லியல் போன்ற சொற்கள் அதிகளவில் பேசப்படுவதும், தமிழின் தொன்மம் பேணப்படுவதும் நிலைநிறுத்தப்படுவதும் குறித்து பல்வேறு கருத்தியல்கள் முன்வைக்கப்படுகின்றன.

உலகின் மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி பொதுவாக மாறும் ஒரு மொழி என்று கருதப்படுகின்றது. இந்த மொழியின் பரம்பரை பல நூற்றாண்டுகளுக்கு மேல் நீடித்து வருகிறது. தமிழ் மொழியின் வாழ்வியல் மற்றும் தொன்ம முறைகள் அதிகம் மாறுபாடு அடைந்துள்ளன. ஆனால் ஆதிகாலத்தமிழின் அடையாளங்களும் வரலாற்றுச் சிறப்பும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு அதன் அழகியலும் நேர்த்தியும் குன்றாமல் இருப்பதனால் தான் இன்னமும் அது செம்மொழியாக நிலைத்து நிற்கிறது.

தொன்மை, தொன்மம், தொல்லியல் குறித்து இருக்கும் பரவலான குழப்ப நிலைமற்றும் மயக்கங்களினால் இவை பற்றியும் நோக்கவேண்டும்.

தொன்மம் (அலவா) என்பது ‘பழைமை’ என்று பொருள்படும் என்று அறிஞர்கள் கூறுவர். இலக்கியங்களில் பழைமையான கருத்துகளைப் பயன்படுத்துவது அல்லது எடுத்தாள்வது தொன்மங்கள் என்று அழைக்கப்படும். பழமை என்பதையே வடமொழியில் புராணம் என்று கூறுகிறார்கள். இதே போல தொன்மங்களைப் பற்றி ஆராயும் துறை தொன்மவியல் ஆகும். இலங்கையில் தொல்லியல் என்று சொல்லப்படுவது தமிழருக்கு எப்படி நாராசமாக மாறிவிட்டதோ அதேபோல இன்னும் பல நாகரிகங்கள் முற்றுமுழுதாக புது நாகரிக உள்ளீர்ப்பு மற்றும் ஊடுருவல் காரணமாக முற்றாகவே சிதைந்துபோயும் இருக்கின்றன.

தமிழ் மொழியில் பல பிரபல இலக்கிய தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. காலாகாலமாக பல்வேறு மொழிகளுக்கும் செழுமையைக் கொடுத்த பலகாப்பியங்களும் இலக்கியங்களும் மட்டுமன்றி இலக்கணத்துக்கான அடிப்படை முதலியவற்றையும் தமிழ் உருவாக்கி வருகிறது.

தமிழ் மொழி பிறந்த இடத்திலிருந்து காலம் கடந்து நிற்கிறது. அந்தக் காலத்தில் தமிழர்கள் வாழ்ந்திருந்த தமிழக மக்கள் வாழ்வு மற்றும் வழிபாடுகள் தமிழ்மொழியின் பெருமையை இன்று அடையாளம் கண்டுகொள்ள உதவின. தமிழர் முன்பு வாழ்ந்த பகுதிகளாகக் கருதப்படும் -தமிழ் மன்னரின் ஆட்சி இடம்பெற்றதாகச் சொல்லப்படும் -முன்னைய பரந்துவிரிந்த தேசங்களில் இன்றும் காணப்படும் எச்சங்களும் வரலாற்று அடையாளங்களும் காண்பிப்பது அவற்றையே.

எனினும் காலமாற்றம் மற்றும் மனிதரின் புலம்பெயர் இயல்புகள் காரணமாக தமிழ்மொழியின் தொன்மம் மற்றும் தமிழர் வாழ்வியல் மாற்றமடைவதன் காரணமாகத் தமிழ்மொழி உலக அளவில் பயன்படுத்தப்படும் ஒன்றாக்கப்பட்டுள்ளது. தமிழின்பாவனை இணையவழியாகவும் பரவலாகியுள்ளது. அடுத்த புலம்பெயர் தலைமுறை மட்டுமன்றி எதிர்காலத்துக்காக ஆங்கிலக் கற்கையைத் தாம் வாழும் புலத்திலும் மேற்கொள்வோர் காரணமாகவும் மொழியின் பயன்பாடு மாற்றமுறவும் குறையவும் கூடும் என்ற அச்சம் எல்லோருக்கும் உண்டு.

இது நியாயமான அச்சமும் சிந்தனையும் தான். ஆனால் பல சுனாமிகள் தோன்றி, குமரிக் கண்டத்தைச் சிறிது சிறிதாகச் சிதைத்து வந்தன. ஒவ்வொரு 10,000 ஆண்டுகளிலும் ஒரு பெரிய சுனாமி தோன்றியதாக ஆய்வறிஞர்கள் கூறிவருகின்றனர். இதனால் சில இலட்சம் மக்கள் மடிந்தனர். ஆனால், மிகச் சிறிதளவு நிலப்பகுதியே அழிந்தது. ஆனால் கடற்கோள் என்பது கி.மு. 10,000 அளவில் தோன்றி கி.மு. 8,000 அளவு நீண்ட காலம் நடந்தது. இதனை மேலை நாட்டு ஆய்வாளர்கள் பெரும்பனிக்காலம் (THE GREAT ICE-AGE) என்கின்றனர். இதன் காரணமாக குமரிக் கண்டம் முற்றிலுமாகவே அழிந்தது.

முதல் பெருஞ்சுனாமி கி.மு. 60,000 ஆண்டுகளை ஒட்டி நிகழ்ந்ததாக ஆய்வறிஞர்கள் கூறினார்கள். இதற்கு அஞ்சியே குமரிக் கண்டத் தமிழர்கள் கட்டுமரங்களில் ஏறி ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா ஆசியகண்டங்களுக்குக் குடியேறினர். இதனால் அந்தக் கண்டத்து இன்றைய மக்களிடம் திரியாத தமிழ்ச் சொற்களும், திரிந்த தமிழ்ச் சொற்களும் பற்பல இலக்கணக் கூறுகளும் இன்றும் அழியாத நிலையில் உள்ளன. இப்படி ஆயிரமாயிரம் இயற்கை அழிவுகள், உலகப் பேரழிவுகள், திட்டமிட்ட சிதைவுகள், மொழி ஊடுருவல்கள், படையெடுப்புக்களையெல்லாம் தாண்டி, நிற்கமுடிந்த எம்மொழி இந்த ஆபத்து நிலையையும் தாண்டும் என்ற நம்பிக்கையை நாம் வைக்கவேண்டும்.

செம்மொழியாக தமிழ் மொழி போற்றிப் புகழப்பட அதற்கான தகைமையாக இருந்ததும் இப்படியான சில காரணங்கள் தான்.

செம்மொழி என்ற நிலையில் ஒரு மொழி ஏற்கப்பட வேண்டுமானால் அதற்கென்று சில தகுதிப்பாடுகள் தேவைப்படுகின்றன. செம்மொழி என்று ஒரு மொழி அழைக்கப்பட வேண்டுமானால் அம்மொழி தொன்மைச் சிறப்புவாய்ந்ததாக, அதற்கென ஒரு தனித்த பண்பாடு உடையதாக, அந்தப் பண்பாடு எதனோடும் தொடர்பற்றதாக, வளமையான இலக்கியச் செழுமை வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்று கருதுகிறார் மொழியியலாளரான ஜோர்ஜ் ஹர்ட். இவ்வளவில் சிறப்புப் பெற்ற உலகச் செம்மொழிகளாக கிரேக்கம், இலத்தீன், அரபி, சமஸ்கிருதம், சீனம் போன்ற பல மொழிகள் திகழ்ந்து வருகின்றன. இவற்றோடு தற்போது தமிழும் 2012 முதல் செம்மொழியாக ஏற்கப் பெற்றுள்ளது. தமிழுக்கு எப்போதோ கிடைக்க வேண்டிய இந்தப் பெருமை அண்மையில் தான் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

தமிழ் தொன்மையானதாக, தனித்த பண்பாடு உடையதாக, இலக்கிய வளம்மிக்கதாக இருப்பதோடு வாழும் மொழியாகவும் அது திகழ்ந்து வருகின்றது. பெரும்பாலான செம்மொழிகள் வழக்கில் இருந்து நீங்கிவிட்டன. மக்களிடம்அவை பேச்சு மொழியாகக் கூட இல்லை. குறிப்பாக சமஸ்கிருதம், பாலி, எகிப்து போன்றன இவ்வகைப் பட்டனவே ஆகும். ஆனால் தமிழின் தொன்மைச் சிறப்பு, மரபு, பண்பாடு போன்றன மாறாமல், சிதறாமல் இன்னமும் காக்கப் பெற்றுவருகின்றன. இதற்கு மிக முக்கியமான காரணம் தமிழ் என்ற மொழியின் கட்டமைப்பு மட்டுமே ஆகும். தமிழ் என்பதை மன்னர்கள், புலவர்கள், மக்கள் வளர்த்தாலும்அவர்கள் மறைந்தபோதும் மறையாமல் தமிழ் காப்பற்றப்பட்டுக் கொண்டேவந்துள்ளது என்பது சிறப்பிற்கு உரியதாகும். இன்னமும் தமிழ் ஒன்றுதான் தமிழர்களைக் காக்கும். உலகைக் காக்கும்.

மொழியின் மூலமான ஒற்றுமையும், மொழி அடிப்படையிலான செழுமையும் சிறப்பியல்புகளும் தான் தமிழராக உலகெங்கும் வாழும் பலரையும் நாடுகள்கடந்து, இப்போதைய குடியுரிமைகள் கடந்து ஒன்றாய் இணைக்கக் காரணமாகிறது.

இனி நமது தமிழ் மொழியின் தொன்மையைப் பற்றி அவதானிக்கலாம்.

செம்மொழிக்கு உரிய தகுதிகளாகப் பதினோரு கூறுகளை எடுத்துரைக்கலாம்.

1. தொன்மை 2. தனித்தன்மை 3. பொதுமைப் பண்பு 4. நடுவுநிலைமை 5. தாய்மைப் பண்பு 6. பண்பாட்டுக் கலை அறிவு -பட்டறிவுவெளிப்பாடு 7. பிற மொழித் தாக்கமில்லா தன்மை 8. இலக்கிய வளம் 9. உயர்சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை 11. மொழிக் கோட்பாடு.

இப்பதினொன்றும் தமிழுக்கு உண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று திருக்குறளுக்குக் காலம் வகுக்கப்பெற்றுள்ளது. இதன் காரணமாக தொன்மைச் சிறப்பு வாய்ந்தது தமிழ் என்பது தெளிவு. செம்மொழித் தகுதிக்கு சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை போதும் என்று முடிவு செய்யப் பெற்றுள்ளது. இதன்மூலம் மூத்த பழமையான மொழி தமிழ் என்பது உறுதியாகின்றது.

ஆனால் கற்காலம் முதலே தமிழர் தம் நாகரீகம், மொழி, பண்பாடு போன்றன தோன்றி வளர்ந்துள்ளன என்று காணும்போது தமிழின் பழமை இன்னும் முற்காலத்ததாக அறியப்படும். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கே முன்பே வாளொடு முன்தோன்றி மூத்த குடி என்ற தொடரின் உண்மைப் பொருள் இப்போதுதான் தெளிவுபடுகிறது. தமிழர்கள் கற்காலத்திலேயே வீரச்செறிவு மிக்க வாழ்வை வாழ்ந்தவர்கள் என்பதே இத்தொடர் உணர்த்தும் உண்மைப் பொருளாகும்.


செம்மொழித்தன்மைகள் பதினொன்றுக்கும் உரியதாகத் தமிழின் சங்கஇலக்கியங்கள் விளங்குகின்றன. இதன் காரணமாக தமிழின் செம்மொழித்தன்மை உடைய இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன என்பது உறுதியாகின்றது.

தமிழ் மொழி எப்போதும் மாறும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தன்னைச் செழுமைப்படுத்தி பழமை மாறாமல் தனியே செழுமைப்படுத்தலை மட்டும் செய்வதன் மூலம் தக்கன பிழைப்பதாக இன்றும் நிலைக்கிறது.

எமது வாழ்வியல் கோலங்களில் தமிழர் பண்பாட்டின் பல கூறுகள் மாறிக்கொண்டிருந்தாலும், தமிழர் வாழும் இடங்களுக்கேற்ப பிற கலாசாரஅடையாளங்களும் சேர்ந்துகொண்டாலும் அடிப்படை மாறாமல், மொழியின்பால் உருவாகிய உறுதியான அடித்தளம் அவ்வளவு இலகுவில் ஆட்டம் கண்டுவிடாது.

எனினும் சிதைவுறாத மொழிப் பாவனையும் கலப்பில்லாத எழுத்துப் பயன்பாடும், திருத்தமான இலக்கணச் செயற்பாடுகளும் எம் செம்மொழியை இன்னும் உறுதிபடச் செய்யும் என்பதை நாம் உணரவேண்டும்.

> **மொழியின் மூலமான ஒற்றுமையும், மொழி அடிப்படையிலான செழுமையும் சிறப்பியல்புகளும் தான் தமிழராக உலகெங்கும் வாழும் பலரையும் நாடுகள்கடந்து, இப்போதைய குடியுரிமைகள் கடந்து ஒன்றாய் இணைக்கக் காரணமாகிறது.**



சிறிகஜன்

# சீனாவின் பட்டுப்பாதையில் அமையும் மத்திய ஆசியாவும் இலங்கையும்



சீனா உலகின் இரு தசாப்தங்களில் முன்னேறிய நாடு என்றால் மிகையாகாது. அதற்குப் பெரிதும் பங்காற்றியவர் xi jin ping. மா வோ சேதுங்கின் காலத்தின் பின் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது. அப்போது தான் xi jin ping ஆட்சிக்கு வந்தார். உலகில் 2023 இல் ஏற்படப்போகும் பொருளாதார நெருக்கடிகளில் இந்த வருடம் ஆசியா பெரியளவு வளர்ச்சியை அடையும் என உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் வசந்தகால மாநாட்டில் உறுதியாக தெரிவித்தது. அத்தோடு சீனாவும் இந்தியாவும் மட்டுமே அதிக GDP சுட்டிகளை எட்டுவதோடு தமது நாணயங்களை உலகப் பாவனைக்குள் கொண்டு வரத் துடிக்கின்றன

### லத்தீன் அமெரிக்க நாடுகள் சீனா 'டீல்'

பிரேசில் அதிபர் லூலா கடந்த ஏப்ரல் பீஜிங் வருகிறார். தான் சீனாவின் பட்டுபாதைக்கு பூரண ஆதரவு வழங்குவதோடு புதிய உலக ஒழுங்கினை உருவாக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார். சீனா - பிரேசில் இடையேயான 150 பில்லியன் டொலர் வர்த்தகத்தை யுவானில் மேற்கொள்ள தீர்மானித்து உடன்படிக்கையில் ஈடுபட்டார். அத்தோடு ஆர்ஜென்டீனா மற்றும் பிரேசிலையும் ஒரு நாணயத்தை புழக்கத்தில் கொண்டுவர லூலா பல முயற்சிகளை எடுத்து வருகிறார். லூலாவின் இலக்கு லத்தீன் அமெரிக்க நாடுகளின் வளங்கள் இவ்வாறு டொலர் வர்த்தகத்தில் ஈடுபட்டு அமெரிக்காவுக்கு உழைத்து கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்பதே. புதிய உலகின் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியில், வாகனங்களில் பயன்படும் அதன் பிரதானமான கூறு யசந நயசவா elements எனப்படும் லித்தியமே ஆகும். உலகின் பெரிய லிதிய ஏற்றுமதி நாடுகளான ஆர்ஜென்டீனா மற்றும் சைல் தமது தேசிய திறைசேரி சொத்தாக லித்தியத்தை அறிவித்தன. இதனூடாக தாங்களே எலக்ட்ரிக் வாகன பற்றறிகளை தங்கள் நாட்டில் தயாரிக்க விரும்புவதாகவும் கூறின. அதைக் கண்ட எலான் மஸ்க் அப்படி இவர்கள் லிட்தியத்தை ஏற்றுமதி செய்யாது இருக்க முடியாது என twitter இனூடாக சொல்லியிருந்தார். இவற்றையெல்லாம் விட ரஷ்யப் பிரதிப் பிரதமர், ' rare earth elements இனை கொண்ட நாணய வர்த்தகத்தை நாங்களும் எதிர்பார்த்து இருக்கிறோம். அத்தோடு BRICS கூட்டணி நாணயத்தை ஒரு digital currency ஆக உருவாக்கி வருகிறோம் . அதற்கான




mining station இனை அமைத்துவிட்டோம்' என்றார். சீனா , மத்திய கிழக்கு நாடுகளுடன் 'பெற்றோ யுவானை' வர்த்தகத்தில் பயன்படுத்த முயற்சித்து வருகிறது. ஈரான் அதற்கு எப்போதும் ஆதரவாக உள்ளது.

### இந்திய ரூபாய் வர்த்தகம்


இந்திய நிதியமைச்சர் reserved bank india வினூடாக பல நாடுகளுடன் ரூபாயில் வர்த்தகத்தை செய்யத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். அதற்கு பிரதமர் மோடி மற்றும் ஜெய்சங்கர் பல திசைகளில் வேலைகளைச் செய்து வருகின்றனர். அதன் முதல் கட்டமாக ரஷ்யாவின் பெரிய கொள்முதலாளரான இந்தியாவுடன் FTA உடன்படிக்கை செய்யும் தறுவாயில் உள்ளது. அத்தோடு பங்களாதேஷ், மலேசியா இந்திய ரூபாய் வர்த்தகத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தன. அதேபோல் இலங்கை-இந்திய ரூபாய் வர்த்தகம் இடம்பெறும். அதற்காக பல கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிந்துள்ளதோடு மோடியை, இலங்கை ஜனாதிபதி சந்திக்கும் தினத்தில் அவை கைசாத்தாகும். இலங்கை- இந்திய FTA இனையும் செய்வதூடாக வர்த்தக முதலீடுகள் இலங்கைக்கு கிடைக்கும், அதையே 'இந்தியாவின் வேகமான தொழிற்பேட்டை வளர்ச்சியின் காரணமாக இலங்கை நன்மையடையும் என நம்புகிறேன்' என்றார் இலங்கை ஜனாதிபதி .காரணம் இந்தியாவை விட இலங்கையில் அதிகமான துறைமுகங்கள் உள்ளன. அத்தோடு தெற்காசியாவில் அதிக சரக்குகளைக் கையாளும் ஆற்றலை இலங்கைக்கு வளங்க சீனா காத்திருக்கிறது. அதே வேகத்தில் இந்தியாவும் தலைமன்னார் ,திருகோணமலை துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை ரணில் கேட்டுள்ளார்.

### மத்திய ஆசியாவின் belt route

மத்திய ஆசிய நாடுகள் இவ்வளவு வளர்ச்சி அடைந்து நல்ல நிலைக்கு வர அவர்களுக்கு சீனாவின் பங்களிப்பே காரணம். முதல் இந்த மத்திய ஆசிய நாடுகள் யாவை? என்று பார்க்கலாம். 1991 இல் சோவியத் யூனியன் உடையும் போது 15 நாடுகளாகச் சிதறியது. அவையே இன்று மத்திய ஆசிய நாடுகளாக உள்ளன. மேற்கு ஆசியாவை இவர்களிடம் இருந்து பிரிப்பது கஸ்பியன் கடல். அதனைக் கடந்தால் ஐரோப்பாவுக்கான பட்டுப்பாதை . அதன் ஊடாக சரக்குகளை அனுப்புவதே சீனாவின் இலக்கு. இது கப்பல் பணத்தை பாதியாகக் குறைக்கிறது. இதன் தூரத்தை இன்னும் குறைப்பதே சீனாவின் இரகசியத் திட்டம். அதனைக் கடந்த வாரம் சேனா மோல்டோவாவுடன் போட்ட திட்டம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அதாவது கஜகஸ்தானை வந்தடையும் சீனச் சரக்கு ரயில்கள் கஸ்பியன் கடலைக் கடக்க வேண்டிய தேவை இல்லை. கஸ்பியன் கடலை கடக்க 24 மணி நேரம் தேவைப்படுகிறது. அதுவே கஜகஸ்தானில் இருந்து மோல்டோவாவுக்கு சரக்கு ரயிலை அனுப்பினால் ரோமானியாவுக்கு வந்துவிடும். பிறகென்ன, ஐரோப்பிய நாடுகள் பூராக தனது வர்த்தகத்தை சீனா இலகுபடுத்தும். மோல்டோவாவுக்கு நடுவே உக்ரேன் உள்ளது. ஆனால் ரஷ்யா, உக்ரேனின் கருங்கடல் ஊடான பகுதியைக் கைப்பற்றி தன்னுடன் இணைக்கிறது. இதனூடாக உக்ரேன், கருங்கடலைப் பாவிக்க முடியாது. ஆகவே சீனாவின் பட்டுப்பாதை தூரம் பல மடங்காகக் குறைகிறது. அதாவது கஜகஸ்தான் ,ரஷ்யா, மோல்டோவா பின்னர் ரோமானியா என்ற வகையில் புதிய பாதையை சீனா திட்டமிட்டுள்ளது. சீனா பீஜிங்கில் இருந்து சங்காய் 350kmh அதிவேக ரயிலை உருவாக்கும் போது உலக நாடுகள் சிரித்தன. ஆனால் சீனா சிந்தித்தது. அது தான் அவர்களது அசுர வளர்ச்சி . 1200km இனை 4.5h இல் கடக்க முடியும். அதே வகை cargo bullet train இனை அந்தப் பாதையில் ஈடுபடுத்தும் சீனா .அந்தப் பாதையைப் பயன்படுத்துபவர்களுக்கு பல சலுகைகளை சீனா- ரஷ்யா இணைந்து வழங்கும்.

### இலங்கையும் பட்டுப்பாதையும்

கடந்த வாரம் சீன மேர்ச்சன்ட் வர்த்தகக் குழுமத் தலைவர் இலங்கை அதிபரைச் சந்தித்தார். இலங்கையில் 2bn டொலர் முதலீடுகளை கொண்டுவர அந்த நிறுவனம் விரும்புகின்றது. இலங்கையில் 2025 இல் தெற்காசிய சரக்குக் கையாளும் நிலையம் உருவாகும். அதனை விட ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் பல முதலீடுகளை சீனா கொட்டுவதன் காரணம் தெற்காசியாவின்



சீனாவின் சரக்குகளை கையாள இலங்கையே இலகுவானது என்பதாலேயே. இதனூடாக மத்திய கிழக்கையும் ஆபிரிக்க வர்த்தகத்தையும் மிக ஆற்றலுடன் செய்ய முடியும். இலங்கை பெரிய பொருளாதா நெருக்கடியில் இருக்க , ஆசிய நாடுகள் தமது நாணயத்தில் வர்த்தகம் செய்ய ஆரம்பிப்பது வரப்பிரசாதமே. இலங்கை இந்தப் பூகோளப் போட்டியைப் பயன்படுத்தி முன்னேறுமா என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.





Best Start
Best Life

## விக்டோரியக் குழந்தைகளுக்கு இன்னும் பெரிய கனவு காண உதவுதல்.

விக்டோரியக் குழந்தைகளுக்கு வாழ்க்கையில் சிறந்ததொரு ஆரம்பத்தை அளிக்கிறோம்.

இதன் பொருள், 2023 ஆம் ஆண்டு முதல் பங்கேற்கும் மழலையர் பள்ளிச் சேவைகளில், விக்டோரிய மாநிலத்தின் மூன்று மற்றும் நான்கு வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் 'இலவச கிண்டர்' (FREE KINDER) திட்டம் வழங்கப்படும். 2022 ஆம் ஆண்டில், நிதியளிக்கப்படும் 'மூன்று வயது கிண்டர்' மாநிலம் முழுவதும் தொடர்ந்து இயங்கவுள்ளது.

உங்கள் உள்ளூர் 'கிண்டர்கார்டென்' சேவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளச் செல்லுங்கள்:
**vic.gov.au/kinder**

THE EDUCATION STATE
VICTORIA State Government | Education and Training
KINDERGARTEN Victorian Government Approved



# CEYLON EXPRESS

## MONEY TRANSFER



- ***Best Rates Guarantee***
- ***Same Day Bank Transfer***
- ***Responsible Customer Support***
- ***Easy, Quick Internet Money Transfer***

**127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052**

# நண்பகல் நேரத்து மயக்கம்

நீண்ட நாட்களுக்கு பிறகு இயக்குநரின் ஒட்டுமொத்த கனவாக விரியும் ஒரு படத்தைப் பார்க்கக் கிடைத்தது . படத்தில் மம்முட்டி உட்பட பல பாத்திரங்களும், புறவயமான கதையும் இருக்கின்றன தான் என்றாலும் இது முற்றாக இயக்குநர் லிஜோ பெல்லிசேரியின் படம் .அந்த வகையில் இந்தப் படம் உணர்வுரீதியாக மிகவும் அணுக்கமான (intimate ) ஒரு தன்மை கொண்டது . அதுவே எனக்கு இதில் பிடித்த அம்சமும் கூட .

கேரளாவில் இருந்து வேளாங்கண்ணிக்கு சில குடும்பங்கள் சேர்ந்து ஒரு குழுவாக சுற்றுப்பயணம் வருகிறார்கள். அதை ஒழுங்குபடுத்தி பொறுப்பேற்று அழைத்து வரும் ஜேம்ஸ் (மம்முட்டி ) திடீரென்று பாதி வழியில் வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கிவிடுகிறார், பின் தன்னை வேறொருவனாக நினைத்துக்கொண்டு, ஏதோ ஒரு தமிழ்க் கிராமத்தில் ஏதோ ஒரு வீட்டின் சமையலறையில் போய் சாப்பிட ஏதாவது இருக்கா? என்று கேட்டு, அந்த ஊரவர்களால் தேடப்பட்டு வரும் சுந்தரமாக மாறிவிடுகிறான். இப்படித்தான் கதை ஆரம்பிக்கிறது.

அங்கு அவனுக்கு எல்லோரையும் தெரிந்திருக்கிறது . ஆனால் அவர்களுக்கு சுந்தரத்தை தெரிந்திருக்கவில்லை. சில நாட்களுக்கு முன் அந்த கிராமத்தில் இருந்து காணாமல் போன சுந்தரம் போலவே ஜேம்ஸ் பேசுகிறான், நடந்துகொள்கிறான் . ஆனால் புறத்தோற்றத்தில் அது ஜேம்ஸ். இயக்குநர் உருவாக்கியிருக்கும் இந்த இரட்டைத்தன்மை தான் இந்தப் படத்தின் ஆதார முடிச்சு .

ஒரு நினைவேக்கத்தை கனவும் , விருப்பக்கனவும் (Dream & Fantasy) கலந்த ஒன்றாக ஆக்கியிருக்கிறார். ஒரு நொடியில் நம் ஒட்டுமொத்த அடையாளத்தையும் வாழ்க்கையையும் தன்னிலையையும் விட்டுவிட்டு வேறொரு மனிதனாக, வேறொரு அடையாளமாக வேறொரு உலகத்துக்குள் , அதே அளவு பரிச்சயத்துடன் நுழைய முடிவது எவ்வளவு பெரிய விருப்பக்கனவு. எவ்வளவு பெரிய விடுதலை . அதனால் தான் இந்தப் படம் intimate ஆனது என்கிறேன்.

இந்த விருப்பக்கனவை ஏதோ புறவயமாக நடக்கும் ஆள் மாறாட்டம் என்பதாக கதையை அமைத்திருக்கிறார் . அந்தரங்கமான ஒரு விஷயத்தை புறவயமாக ஒரு மெலோடிராமாவாக வடித்திருக்கிறார் . அந்தக் கிராமம் தமிழகத்தின் எல்லா கிராமங்களையும் போலதான் இருக்கிறது . ஆனால் அதைத் திரையில் கொண்டு வந்த விதத்தில் எங்கோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு காலகட்டத்தில் இருக்கும் கனவுக் கிராமம் என்று தோன்றவைக்கிறார் .




இந்தக் கற்பனையை வெற்றிகரமாக திரையில் நடத்திக் காட்டியிருப்பவர் ஒளிப்பதிவாளர் தேனி ஈஸ்வர். படத்துக்கு பொருத்தமான ஒரு காட்சி மொழியை தேர்ந்தெடுத்திருக்கிறார். பல பிரேம்களை டேப்ளூ வகைக் காட்சிகளாக எடுத்திருப்பார் .

டேப்ளூ (Tableau) சீன்ஸ் என்பதில் , ஒரு காட்சியில் பிரேமில் உள்ள கதாபாத்திரங்கள் எல்லாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாடகீய பாவனையில் நின்றுகொண்டோ அமர்ந்துகொண்டோ இருப்பார்கள். பழைய ரொமாண்டிசிஸ ஓவியங்களின் அமைப்பை ஒத்திருக்கும். இது காட்சிக்கு ஒரு தனித்துவமான அழகியலையும், நாடகத்தன்மையையும் அளிக்கும். பகலில் கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாம் உறங்கிக்கொண்டிருக்கும் காட்சியும், பேருந்துக்கு வெளியே எல்லோரும் என்ன செய்வதென்று தெரியாமல் காத்துக்கொண்டிருக்கும் காட்சியையும் உதாரணமாகச் சொல்லலாம்.

படத்துக்கு மெலோ டிராமா உணர்வை அளிக்கும் மற்றொரு விஷயம், படம் முழுதுமே பின்னணியில் வந்து கொண்டிருக்கும் வெவ்வேறு தமிழ்த் திரைப்படப் பாடல்கள் மற்றும் வசனங்கள். கவனித்துப் பார்த்தால் அவை எல்லாமே உச்சகட்ட உணர்ச்சி வெளிப்பாட்டுத் தருணங்களைச் சுட்டும் மெலோடிராமாடிக் துணுக்குகளாக இருக்கும் . ஆனால் படத்தில் நடக்கும் ஒவ்வொரு காட்சிக்கும் நேரடியாகப் பொருந்திப் போவது போன்ற வசனங்கள் . சில சமயம் படம் சொல்லாது விட்ட விஷயங்களையும் கூட இந்தப் பின்னணி வசனங்கள் சொல்லியிருக்கும்




புறக்காட்சிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு பாத்திரங்களின் மனதில் அடியாழத்தின் நிகழும் உணர்ச்சிகர எதிர்வினைகளாக (inner voice ) விளக்கங்களாக இந்தப் பின்னணிக் காட்சிகள் அமைந்திருக்கின்றன . ஒரு படத்தில் நிலக்காட்சிகள் (landscape ) வருவது போலவே இது ஒலிக்காட்சிகளை ( sound scape) உருவாக்குகிறது.

ஒரு தளத்தில் லெளகீகமாக இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது, ஜேம்ஸை எப்படி திரும்ப கேரளாவுக்கு அனுப்புவது என்றே படத்தின் எல்லோரும் முயற்சி செய்து கொண்டிருக்க இன்னொரு தளத்தில் இந்தக் குழப்பம் உருவாக்கும் உணர்வுச் சலனங்களை சொட்டும் மழை நீர் போல இந்தப் பாடல்கள் உருவாக்குகின்றன. படத்தில் மிக ஆழமாக உணர்வுப்பூர்வமான தளம் இதுதான் என்று நினைக்கிறேன்.

கிராமத்துக் காட்சிகள் யாவுமே நிலைக்காட்சிகளாக இருக்கும், கமரா நகராது . கதாபாத்திரங்கள் மட்டும் காட்சிக்குள் வந்தபடியும் போனபடியுமாக இருப்பார்கள் . அதே போல கிராமத்தில் அண்மைக் காட்சிகள் எதுவுமே இருக்காது. முக்கியமாக சுந்தரத்தின் மனைவியான பூங்குழலியின் முகம் தூரக் காட்சியில் கூட தெளிவாக இருக்காது. பூங்குழலியின் முகம் இறுதிக் காட்சியிலாவது அண்மைக் காட்சியாக வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். ஒரே இடத்தில் கறுப்புக் கண்ணாடி அணிந்த பாட்டியின் முகம் மட்டுமே அண்மைக் காட்சியாக வரும். Perhaps she is the all-knowing blind oracle .

முதன் முறை ஜேம்ஸ் தான் சுந்தரம் இல்லை என்று உணரும் தருணம் கனவு மெல்லப் பின்வாங்குகிறது. அதன் பின் வீட்டுக்கு வந்து பூங்குழலி கையால் சாப்பிடும் போது தான் சுந்தரம் இல்லை என்று புரிந்துவிடுகிறது. ஒரு சிறிய இடைவெளியில் சுந்தரமாகவும் ஜேம்ஸாகவும் இருக்கிறான். எப்படி சில சமயம் நாம் கனவு காணும் பொழுதே இது கனவு தான் என்பதும் தெரியுமே அது போல. அந்த கனவு முற்றாகக் கலையும் நேரம் திரும்பிக் கூட பார்க்காமல் ஜேம்ஸ் நடந்துபோகிறான் .

* * *

படத்தில் லிஜோ பெல்லிசேரியின் கனவை வெற்றிகரமாக திரைக்கு கொண்டு வந்ததில் ஒளிப்பதிவாளருக்கு பெரும் பங்குண்டு . ஊடுருவும் காட்சிகளில் இசையைப் போலவே ஒவ்வொரு சட்டகமும் ஒன்றுக்குள் என்று ஊடுருவி இருக்கும் . ஒரு வீட்டின் கதவு இன்னொரு வீட்டின் கதவு அதன் ஜன்னல் என்றும் சட்டகத்துக்குள் சட்டகமாக இருக்கும் . ஜப்பானிய இயக்குனர் ஓசூவின் (Ozu) பாணி .

மம்முட்டி வேட்டியில் இருந்து லுங்கிக்கு மாறுவது போல மிக இயல்பாக ஜேம்ஸிலிருந்து சுந்தரமாக மாறியிருப்பார். தமிழ் உணவு பிடிக்காத அதிகாரம் செலுத்தும் கறாரான ஒரு மலையாளியில் இருந்து கலகலப்பாக பேசி, எல்லோருக்கும் உதவி செய்யும் ஒரு கிராமத்துத் தமிழனாக சிரமமே இல்லாமல் மாறியிருப்பார். படத்தில் ஒரு இடத்தில் கெளரவம் படத்தில் இரண்டு சிவாஜிகள் மோதிக்கொள்ளும் காட்சியை ஒரே ஆளாக நடித்துக் காட்டியிருப்பார் மம்முட்டி .

ஒரு தமிழ்க் கிராமத்தில் ஒரு மலையாள டூரிஸ்ட் கூட்டம் மாட்டிக்கொள்வதான களத்தை உருவாக்கியதிலும் லிஜோ வெற்றி பெறுகிறார். இரண்டு கலாசாரங்களை, இரண்டு வெவ்வேறு மனநிலைகளை எதிர்பாராத ஒரு சூழலில் சந்திக்க வைக்கிறார் .மிகவும் 'பிரக்டிகலான ' மலையாள மன நிலையும் மெலோடிராமாடிக்கான தமிழ் மனநிலையும் ஒரு கனவில் சந்தித்துக்கொள்கின்றன. அது சில poignant தருணங்களையும் உருவாக்குகிறது .

இந்தப் படத்தை பார்த்து முடித்தபின்னும் நெடுநேரம் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. பல வகைகளில் இது முக்கியமான படம். கனவுகளை ஒரு கதையாடலாகப் பயன்படுத்தும் பல புகழ் பெற்ற படங்கள் வந்துள்ளன . ஃபெலினியின் 81/2 , குரசோவாவின் Dreams போல. அந்த வரிசையில் வரும் இந்தியப் படமாக இதை தாராளமாக வைக்கலாம். இயக்குநர், ஒளிப்பதிவாளர் , நடிகர் என்று அனைவருமே விருது பெறத் தகுதியான படம் இது. படம் நெட்பிளிக்ஸில் காணக்கிடைக்கிறது.


கார்த்திக்வேலு

## நாட்டை அடகு வைக்கத் தயார்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக ஐ.எம்.எவ்வின் கால்களில் சரணடைந்திருக்கிறோம் அல்லவா. இது மட்டுமல்ல, சீனா, இந்தியா, அமெரிக்கா என உலக நாடுகள் அனைத்திடமும் கையேந்திக் கொண்டிருக்கிறோம். பிறரிடம் நம்மை அடகு வைக்கத் தயாராக இருக்கும் நாம் நமக்கிடையில் அமைதியையும் சமாதானத்தையும் அதிகாரத்தையும் பகிரத் தயாரில்லாமல் இருக்கிறோம். இந்த அறியாமையைப் பற்றி நான் நாடாளுமன்றத்திலேயே சுட்டிக்காட்டிப் பேசியுள்ளேன்.

**கேள்வி: அப்படிப் பல உண்மைகளைப் பலரும் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். ஆனால் அதையெல்லாம் அந்த மன்று ஏற்றதில்லையே! ஏன் நீங்கள் கூட அரசாங்கத்துடன் முன்பு இணைந்து செயற்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கைகளையும் நியாயங்களையும் வெற்றிகொள்ள முடிந்ததா?**

**பதில்:** நமது அரசியல் சூழலின், ஜனநாயக முறைமையின் அவலம் இதுதான். இந்த அரசியல் அப்படித்தானிருக்கும். இனவாத அரசியலுக்குள்ளும் இனவாத ஆட்சிக்குள்ளும் அறத்தையும் நேர்மையான அரசியல் இலக்குகளையும் எட்டுவது கடினமே. ஆனாலும் இதற்குள்தான் நாம் எமக்கான வெற்றிக்கனிகளைப் பறிக்க வேண்டும். நமது சமூகத்தை கல்வி, பொருளாதாரம், ஆரோக்கியம், தொழில்துறை போன்றவற்றில் பலப்படுத்த வேண்டும். எதிர்த்தரப்பு இதற்கு இடைஞ்சல் செய்தால் அதை நாம் புத்திசாதுரியமாக முறியடிக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்திடம் எமது நியாயங்களை எடுத்துரைக்கலாம். நீதியைக் கோரலாம். கிருசாந்தி கைதடியில் சிதைத்துக் கொல்லப்பட்டதை மனித உரிமைகள் பேரவைக்குக் கொண்டு சென்றது நான்.

அதற்கான வரலாற்றுப் பதிவுகள் உண்டு. 15.07.1998 இல் இந்தப் பிரதியை சபாபீடத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். அதைப்போல திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைப்பற்றிப் புள்ளி விவரங்களுடன் 04.12.1998 இல் ஆதாரங்களை முன்வைத்து அதை எதிர்த்துள்ளேன். இவற்றுக்கு இன்னும் திருப்திகரமான நீதி கிடைக்கவில்லை என்பது உண்மையே. ஆனாலும் பல விடயங்களைத் தந்திரோபாயமாக நிறைவேற்றியுள்ளோம். அரசியல் என்பது தொடர்ந்து ஆடப்படவேண்டிய சதுரங்க விளையாட்டாகும். எதிர்த்தரப்பை தொடர்ந்து பல வகையிலும் இடையீடு செய்து கொண்டேயிருக்க வேண்டும். அதில் சலிப்படையவோ பின்வாங்கவோ முடியாது. உலகம் முழுவதிலும் இதுதான் நடைமுறை. எங்கேதான் திருப்தியான ஆட்சி நடந்துள்ளது? அல்லது இப்போது கூட அப்படியொரு நிறைவான ஆட்சியுண்டா? எதிர்த்தரப்பை எல்லாவற்றுக்கும் எதிர்ப்பது வெறுமனே எதிர்ப்பரசியலாகக் குறுகி விடும். அதனால் யாருக்கும் நன்மைகளில்லை.

**கேள்வி: தமிழ்த்தேசியக் கட்சிகளின் சிதைவை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? நீங்கள் அவற்றுடன் இணைந்து செயற்படும் சாத்தியமுண்டா?**

**பதில்:** தமிழ்த்தேசியக் கட்சிகளின் சிதைவுக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றிற்குள் ஜனநாயகமின்மையும் மக்கள் மீதான கரிசனைப் போதாமையும் மக்களுக்கான களப்பணிகளை ஆற்றுவதில் உள்ள அசிரத்தையும் முக்கியமான காரணங்களாக உள்ளதென எண்ணுகிறேன். ஆயுதப் போராட்ட இயக்கக் காலத்திலிருந்தே இந்த ஜனநாயக நெருக்கடி தொடர்கிறது. மக்களின் விருப்பம் கட்சிகளின் ஒருங்கிணைந்த செயற்பாடுதான் என்றாலும் நடைமுறையில் அது சாத்தியமற்றதாகவே உள்ளது. கட்சி நலன், தலைமை நலனைக் கடந்து மக்கள் நலனை முன்னிறுத்திச் சிந்திப்போமாக இருந்தால் நாம் இடைவெளிகளைக் கடந்து ஒருங்கிணைந்து செயற்பட முடியும். அதற்குரிய அரசியல் பாதையையும் வகுத்துக் கொள்ள முடியும். அடுத்தது, நாம் போருக்குப் பிந்திய அரசியலைக் குறித்துச் சிந்திக்கிறோம். அதன் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளும் சக்திகளுடன் கைகோர்க்கத் தயாராகவே உள்ளோம்.

**கேள்வி: பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் அரசாங்கம் புத்தர் சிலைகளை வைத்துக் கொண்டிருக்கிறதே! இதைப்பற்றிய உங்கள் நிலைப்பாடென்ன?**

**பதில்:** இதொரு பைத்தியக்காரத்தனமான வேலை. இந்த மாதிரி முட்டாள்தனங்களால்தான் ஐ.எம். எவ் போன்றவற்றிடம் கையேந்தவும் நம்மை அடகு வைக்கவும் உழைப்பை வட்டிக்குத் தானம் பண்ணவும் வேண்டிய நிலை வந்தது. அதற்குப் பிறகும் புத்தி வரவில்லை என்றால் பௌத்தம் ஊட்டிய அன்பும் அறிவொளியும் என்ன? என்ற கேள்வி எழுகிறது. துறவிகளும் மதகுருக்களும் சமூக ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டும். சமூகங்களைப் பதற்றமடைய வைக்க முடியாது. இப்பொழுது நடக்கும் கூத்துகளைப் பார்த்தால் ஐ.எம்.எவ்வின் கடனுதவியிலும் இந்தச் சிலை வைப்பு நடக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்கு தமிழ்த்தரப்பில் வழங்கப்படும் பதிலும் சரியானதல்ல. இந்த ஏட்டிக்குப் போட்டி நிலை நிச்சயமாக எல்லோருக்கும் பாதிப்பையே உண்டாக்கும்.

**கேள்வி: இந்தியாவின் பங்களிப்புக் குறித்து...?**

**பதில்:** இந்தியாவுக்கு பிராந்திய ரீதியில் வலுவும் பங்களிக்க வேண்டிய கடப்பாடும் உண்டு. அதைத் தமிழ்த்தரப்பும் சரியாக இனங்கண்டு செயற்பட வேண்டியுள்ளது. இன்றைய அரசியல் சீனா, அமெரிக்கா என்ற மும்முனையில் சிக்குண்டுள்ளது. இதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவும் பங்களிப்பும் எப்படியிருக்கும்?**

**பதில்:** நலன்களின் அடிப்படையிலேயே அரசியல் அச்சு சுழல்கிறது என்பார்கள். ஆகவே அறம் என்பது இரண்டாம் பட்சமாகிறது. ஆனாலும் நாம் எதையும் புறக்கணிக்க முடியாது. இருந்தாலும் எப்பொழுதும் உறவாக இருக்க வேண்டிய அயற் சமூகங்களுடனான உறவுக்குப் பின்னர்தான் பிற உறவுகளெல்லாம். சர்வதேசம் என்பது ஒரு மாயக்கண்ணாடி என்ற உலக வரலாற்று அனுபவத்தையும் நாம் மனம் கொள்ள வேண்டும்.

**கேள்வி: இறுதியாக நீங்கள் சொல்லக் கூடியதென்ன?**

**பதில்:** எப்பொழுதும் வாய்ப்புகளுண்டு. எதிலும் சில சாத்தியப் புள்ளிகளிருக்கும். அதைக் கண்டறிய வேண்டும். மெல்ல மெல்லத்தான் நாம் முன்னேற முடியும். சிறுகச் சிறுகத்தான் எமது நலன்களை அடைய முடியும். இதொரு நீண்ட போராட்டம். ஆனால் ஒரு புள்ளியிலும் நாம் பின்னடைய முடியாது.

# அவுஸ்திரேலியர்களின் சுதந்திரங்கள்

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.

இம்முறை சட்டம் பற்றி அறிவில் அவுஸ்திரேலியாவின் பிரஜைகள் (citizens) அனுபவிக்கும் சுதந்திரங்கள் எவை? என ஆராய்வோம்.

அவுஸ்திரேலியா பலராலும் அதிர்ஷ்டமான நாடு எனக் கருதப்படுகின்றது. இது ஓரளவுக்கு உண்மையும் கூட இதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று, பொருளாதார பலம் வாய்ந்த நாடாக அவுஸ்திரேலியா கருதப்படுகிறது. மேலும் அவுஸ்திரேலியா ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றும் ஒரு நாடு எனக் கருதப்படுகின்றது. இதுவும் ஓரளவுக்கு உண்மை. இவ்விடத்தில் அவுஸ்திரேலியாவின் பிரஜைகள் (Citizens) என்ன, என்ன சுதந்திரத்திற்கு உரித்துடையவர்கள் (the freedoms of Australian citizens) எனப் பார்ப்போம்.

முதலாவதாக அவுஸ்திரேலியப் பிரஜைகள் அனுபவிக்கும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகும். அவுஸ்திரேலியாவில் ஒரு அவுஸ்திரேலியப் பிரஜை சட்ட வரம்புக்குள் நின்று, எந்த விடயம் பற்றியும் தனது கருத்தினைத் தெரிவிக்கும் சுதந்திரத்தினைக் கொண்டவர் ஆவர்.

பேச்சுச் சுதந்திரம் இருப்பதனால்தான் நம் மக்கள் புதிய புதிய முறையில் சிந்தித்து அவுஸ்திரேலிய சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தி மேன்மை மிக்க சமுதாயமாக மாற்றிக் கொண்டு வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

எனினும் இப்பேச்சுச்சுதந்திரத்திற்கு மட்டுப்பாடுகளும் உண்டு. உதாரணமாக பொய் பரப்புதல் ,ஒருவரைத் தாழ்த்தி அவதூறு செய்தல் என்பன ஏற்புடையதாகாது. எனினும் இவ்விடத்தில் ஒரு விடயத்தினைக் குறிப்பிடுதல் அவசியம் என நான் கருகிறேன். அவுஸ்திரேலிய அரசியலமைப்பானது பேச்சுச் சுதந்திரம் பற்றி குறிப்பிடவில்லை என்று முக்கியமான ஒரு அம்சம் ஆகும்.

அவுஸ்திரேலியப் பிரஜைகளின் பேச்சுச் சுதந்திரம் அவர்கள் சமூக கலாசாரத்தால் ஏற்பட்ட ஒன்று ஆகும்.

அவுஸ்திரேலிய பிரஜைகள் அனுபவிக்கும் இரண்டாவதான சுதந்திரம் ‘‘ஒன்று சேர்ந்து அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கான சுதந்திரம்’’ ஆகும். (Freedom of Association)

இதன் பொருள் என்னவெனில், ஒரு நபர், அரசியல் கட்சி அங்கத்தவராகவோ அன்றி தொழிற்சங்க அங்கத்தவராகவோ எந்தவித துன்புறுத்தலுக்கும் ஆளாகாமல், சேர (Join) முடியும்.

அவுஸ்திரேலிய பிரஜைகள் அனுபவிக்கும் மூன்றாவதான சுதந்திரம் ‘‘சுதந்திரமாக நடமாடும் உரிமை’’ ஆகும். (Freedom of movement)

அவுஸ்திரேலியப் பிரஜைகள் அவுஸ்திரேலியாவை விட்டு “வெளியேறவோ” அன்றி “உள் நுழையவோ” சுதந்திரம் உடையவர்கள் ஆவார். எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை.

நான்காவதாக நாம் பார்க்கப் போகும் அவுஸ்திரேலியப் பிரஜைகள் அனுபவிக்கும் சுதந்திரம் எந்த மதத்தினையோ அன்றி மதமற்ற முறையையோ பின்பற்றும் உரிமை (Freedom of Religion) ஆகும்.

அவுஸ்திரேலிய பல்கலாசாரத்தைப் பின்பற்றும் ஒரு நாடு (Multicultural society) எனப் பலராலும் கருதப்படுகின்றது. இது “ஓரளவுக்கு” உண்மையும் ஆகும்.

அவுஸ்திரேலியப் பிரஜைகள் எந்த மதத்தினையோ அன்றி மதமற்ற முறையையோ பின்பற்ற உரித்துடையவர் ஆவார்.

முக்கியமான விடயம் என்னவெனில் அவுஸ்திரேலியாவில் “அரச மதம்” என எந்த மதமும் இல்லை.

எந்த மதக்கோட்பாடுகளும் அவுஸ்திரேலியச் சட்டத்தை மீறமுடியாது என்பது அவுஸ்திரேலியாவின் சட்டமாகும்.

அடுத்து நாம் பார்க்கப்போகும் அவுஸ்திரேலியப் பிரஜைகளின் சுதந்திரம் ‘‘ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்’’ ஆகும். (Freedom of Assembly)

இந்தச் சுதந்திரத்தால் மக்கள் அரசியல், சமூகத் தேவைகளுக்காக ஒன்று கூடமுடியும். இது எதுவித சட்டமுறைமையற்ற செயலும் அல்ல. ஆனால் இது வன்முறையில் ஈடுபட இடமளிக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட சுதந்திரங்களுக்கு அவுஸ்திரேலியப் பிரஜைகள் உரித்துடையவர்கள் ஆவர்.

எனினும் நாம் முக்கியமாக நடைமுறையில் கண்ட விடயம் என்னவெனில், பொதுமக்கள் தமது உரிமை அல்லது சுதந்திரம் பற்றி அறிவற்றவர்களாக இருந்தால் எவ்வாறு அந்தச் சுதந்திரங்களை நடைமுறையில் பின்பற்றுவர்?

எனவே மக்கள் தமது உரிமை பற்றிய அறிவைப் பெற முயலவேண்டும்.

# மாதராசிபலன்



## மேடம்

கலையார்வம் மிக்க மேஷ ராசியினரே, உங்களுக்கு எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமையும் இருக்கும். இந்த மாதம் வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும்.

நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் சாதகமாக நடந்து முடியும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனக்கசப்பு மாறும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான கவலைகள் நீங்கும்.

## கடகம்

கடின உழைப்பில் ஸ்திரமான வளர்ச்சியைப் பெறும் கடகராசியினரே, இந்த மாதம் எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் யோசித்துச் செய்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும் அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும்.

## துலாம்

நியாயமான திட்டங்களுக்கு ஆதரவு அளித்து அடுத்தவர் மதிப்பை பெறும் துலா ராசியினரே, இந்த மாதம் ஆக்கபூர்வமான யோசனைகளைச் செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும் ,ஆனால் உங்களுக்கு எதிராகச் சிலர் செயல்படும் சூழ்நிலை இருப்பதால் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயல்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள்.

## மகரம்

சிறந்த அணுகுமுறையும், சாதிக்கும் திறமையும், சிறந்த நிர்வாகத் திறனும் உடைய மகர ராசியினரே , இந்த மாதம் எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். ஆனால் பூர்வீகச் சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாகத் தங்களது வேலைகளை செய்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன்மூலம் அமைதி ஏற்படும். எதிலும் எச்சரிக்கையாகச் செயல்படுவது நல்லது.

## இடபம்

பக்குவமான அணுகுமுறையினால் எதிலும் சாதகமான பலனைப் பெறும் ரிஷப ராசியினரே , இந்த மாதம் பணவரத்து கூடும். செயல்திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையைச் செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச்சுமை குறைந்து காணப்படும். கணவன்-மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும்.

## சிம்மம்

வாழ்க்கையில் பலவகை சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறியும் திறனுடைய சிம்மராசியினரே, இந்த மாதம் எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் இலாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும்.

## விருச்சிகம்

நல்லது, கெட்டது அறிந்து சமயோசிதமாக செயல்படும் திறமை உடைய விருச்சிக ராசியினரே , இந்த மாதம் வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். பணவரத்து கூடும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின்போதும் கவனம் தேவை.

## கும்பம்

எதையும் வேகமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் வாழ்க்கையில் முன்னேற்றமும் காணும் கும்ப ராசியினரே , இந்த மாதம் வீண் செலவுகள் உண்டாகும். எதிர்பார்த்த இடமாற்றம் உண்டாகலாம். காரியங்கள் முடிவதில் தாமதப்போக்கு காணப்படும். தேவையற்ற மனச் சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்துச் செல்வது நன்மைதரும். தொழில் வியாபாரம் மெத்தனமாகக் காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம்.

## மிதுனம்

உலக அனுபவ அறிவைப் பெற்ற மிதுன ராசியினரே, நீங்கள் அடுத்தவரின் தராதரம் அறிந்து உதவிகள் செய்யக் கூடியவர். இந்த மாதம் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். தீ, ஆயுதங்களை கையாளும் போது கவனம் தேவை.

## கன்னி

அசத்தலான நடை, உடை பாவனையுடன் ஆடம்பரமாக வாழும் கன்னி ராசியினரே, இந்த மாதம் புத்திசாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது, எதை விடுவது என்ற மனத்தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மேல் அதிகாரிகள் கூறுவதை கேட்டுத் தடுமாற்றம் அடையலாம். குடும்பத்தில் நடைபெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தைத் தூண்டலாம்.

## தனுசு

உயர்தரமான எண்ணங்களையும், உயர்ந்த திட்டங்களையும் உடைய தனுசு ராசியினரே , இந்த மாத இறுதியில் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுத்தெம்பும் உற்சாகமும் தோன்றும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பணவரத்து திருப்தியாக இருக்கும். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். மாணவர்களே, பாதியில் நிறுத்திய கல்வி தொடர்பான விஷயங்களை மீண்டும் தொடர்வீர்கள்.

## மீனம்

அடுத்தவர்களை பற்றிக் கவலைப் படாமல் நீங்கள் நினைத்தது தான் சரி என்று திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்யும் மீனராசியினரே, இந்த மாதம் எதிலும் சாதகமான நிலை காணப்படும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்துப் பாராட்டு பெறுவார்கள். பதவி உயர்வு கிடைக்கலாம். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும்.

# புயலுக்குப்பின்...

முதல் நாள் புத்தாண்டு விளையாட்டில் சக்கைபோடு போட்டவர்கள் ‘ஏ ‘புளொக் குவியலில் நின்றனர். சார்ஜன்ட் அவர்கள் பெயரை எடுக்க மறுத்துவிட்டான். தோல்வியோடு திரும்ப வந்துகொண்டிருந்தனர். வழியில் ஒரு வீரை மர நிழலில் முன்னரே பார்வதி உட்பட பலர் பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்களைக் கடந்தபோது டயனா பார்வதியை கெட்ட வார்த்தையால் திட்டினாள், விசுக்கென எழுந்த கவிதாவை கையைப் பிடித்து இழுத்த பார்வதி “ விடு உதுகளுக்கெல்லாம் பதில் சொல்லி உன்ர சக்தியை வீணாக்காதை” என்றாள். அத்துடன் அவ்விடத்தை விட்டு எல்லோரும் கலைந்து சென்றனர்.

நேரம் பகல் பதினொரு மணியைத் தொட்டபோது ஒரு பெண் பார்வதியின் கொட்டிலை எட்டிப்பார்த்து,

“மம்மீ.. உங்கள ஒப்பிஸூக்க வரட்டாம்” என்றாள். பார்வதி அங்கே போனபோது உள்ளே ரோஸியும், மஞ்சுவும் நிற்பதைக் கண்டாள். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது போகக் கூடாது என நினைத்து வெளியே நின்றாள்.

“அம்மா, வாங்க” டயானா, நித்திலா, ரோசிமஞ்சு ஆகியோருடன் மேலும் ஒரு பெண் நின்றாள்.

பொறுப்பதிகாரி, எடுத்த எடுப்பிலேயே, “ அந்தப் பிள்ளையள தூஷணத்தில் பேசினீங்களா..?” என்றான். பார்வதி “ இல்லையே!.” என்றாள் கூடவே “சென்றி சொன்னதைத் தமிழில் சொன்னேன் ” என்றாள்.

“ சென்றி தூசணம் சொன்னதா?”

“ இல்லவே இல்லை” என்றாள் பார்வதி

“ இவங்க நீங்க சொன்னதாச் சொன்னாங்க” என்றார்.

“நீங்க நடுநிலையானவர், இவங்களத் திருப்தி செய்யவேணுமெண்டா எனக்கு பேசலாம், நான் சொல்லயில்லை. எல்லாத்துக்கும் கடவுள் இருக்கிறார், இதுக்குமேல எனக்கெதுவுமில்ல” என்ற பார்வதி அப்படியே ரோஸியிடம் திரும்பி

“ நீங்க என்னட்ட கேட்டிருக்கலாமே! எங்கட பிரச்சினைய ஏன் மற்.....” அவள் வார்த்தையை முடிக்க முன் “ சரி அம்மா போங்க” என்றான் அதிகாரி.

பார்வதிக்கு உண்மையில் கோபமாவும் அதேசமயம் தன் இயலாமையை நினைத்து வருத்தமாகவும் இருந்தது.

எத்தனை விடயங்களைக் கண்டும் காணாமல் விட்டிருப்பாள், எங்கட பிரச்சினையை சிங்களவனட்ட விடக்கூடாது, அவன் ஆர் எங்கள அதிகாரம் பண்ண என்று சொல்லிச் சொல்லியே மறைத்தவள் இப்போது எல்லாரும் அப்படி நினைக்க மாட்டார்கள் என்று புரிந்து கொண்டாள்.

கோவிலுக்குத் திரட்டிய நிதியில் ஆமிக்கு சோடாவும் பலகாரமும் வாங்கி கொடுத்தும், ஆமிக்காறர் சென்றியில் வேட்டையாடி இறைச்சி கொண்டு வந்து அவர்களுடன் பங்கிட்டதும் காரணமாகத்தான் என்று நினைத்தாள் பார்வதி. ’சொந்த இனத்தையே காட்டிக் கொடுத்து தாம் வாழ இவர்கள் தயார், என்ன மனிதர்கள்?’ பார்வதி அமைதி வேண்டி கோவிலடிக்குப் போனாள். பிள்ளையார் சிலையல்ல, கல்தான் . அதன் முன் சற்று தியானத்தில் அமர்ந்தாள். எழுந்து தன் குடிலை நோக்கி நடந்தாள். அவள் வீதியைக் கடக்கும்போது பொறுப்பாளர், வீதியில் நின்றார். அவள் எதுவும் பேசாமல் கடந்து சென்றாள்.

திடீரென முகாமினுள் பரபரப்பு ஏற்பட்டது. பார்வதி தன் குடிலருகே நின்ற ஒரு பெண்ணிடம்,

“ என்ன பிள்ளை ஆரவாரம்”

“மம்மீ.. ஒன்று முதல் பதின்மூன்றாம் அணிவரை அனைவரையும் உடைமைகளோட ரெடியா இருக்கட்டாம்” என்றாள்.

பார்வதி அன்று விரதம். அவளுக்கான உணவு “பி” புளொக்கில் உதயாவும் தூயவளும் சமைத்திருப்பர். பார்வதி புறப்படும் முன் முகாம் ஆரவாரமாக இருப்பதை அவதானித்தாள். பின் வேகமாக “ பி” புளொக்கை நோக்கி நடந்தாள்.

வழியிலேயே தூயவளும், உதயாவும் எதிர்ப்பட்டனர்.

“ அட நான் சாப்பிட வாறன்.. நீங்க எங்க போறீங்க? “என்றாள் பார்வதி.

“இல்லை நீங்களும் போறீங்களாம் எண்டு கதை வந்தது.. அது தான்”

“என்ர பதிவு ‘பி’ புளொக்தானே இஞ்ச எப்பிடி வரும்? நீங்க வாங்க.சமைச்சீங்க தானே?...”

“ஓ, வாங்க” என்றபடி திரும்பினர். என்றாலும் சாப்பிட்டு முடிந்ததும் கூட உதயா கேட்டாள்.

“நீங்களும் போறீங்களா?”

“இருங்க பஸ் வெளிக்கிட்ட பிறகு சொல்லுறன்” என்றபடி திரும்பினாள் பார்வதி.

பார்வதி வந்து குடிலுக்குள் பாயை விரித்து சில நிமிடம் ஆனபோது வெளியே ஆரவாரம் மிகுந்தது.

“போறவை எல்லாரையும் லைன் பண்ணட்டாம்” வருகிற ஆரவாரமும் கேட்டது. இதற்குமேல் படுத்திருக்க மனமில்லாமல் பார்வதி எழுந்தாள்.

பெரிய நடைபாதையில் பிள்ளைகள் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு உரையாற்ற பொறுப்பாளர் முன்நின்றார்.

“ என்னதான் பேசுகிறார் பார்ப்போமே” என விடுப்பு பார்க்க நின்ற பிள்ளைகளுடன் பார்வதியும் போய் உட்கார்ந்தாள். ஆனால் பொறுப்பாளர் பேச ஆரம்பிக்கமுன்,

“எங்க அம்மா.? ” என வினாவினார். பார்வதி எழுந்து முன்னே சென்றாள். ’மொழி பெயர்க்கவாயிருக்கும்’ எனத் தள்ளி நின்றாள்.

“எல்லாருக்கும் வணக்கம். எல்லாரும் பம்பமடுவுக்கும் போறீங்க, விருப்பமா?” என்றார்.

“மறுபடி அங்கயா?” என சிலர் அங்கலாய்க்க பலர்,

“இல்லை” எனக் கோரஸாக குரல் கொடுத்தனர்.

“ நான் என்ன செய்ய முடியும் ? மேலிடம் உங்களை அனுப்பச் சொல்லியிருக்கு பஸ் வந்திட்டுது, இப்ப ரெண்டு மணி - சரியா மூன்று மணிக்கு உடைமைகளோடு லைன் பண்ணுங்க. ஒரு ஆள் ரெண்டு பாக் (பை) வாளி கொண்டு போகலாம். போறவங்க பொருளெல்லாம் அதுக்க போடுங்க.”

‘‘நன்கு எல்லோரையும் துழாவிப் பார்த்தபின் பார்வதியைப் பார்த்து.

“இந்த இருநூத்து இருவத்தைஞ்சு பேருக்கும் நீங்க இன்சார்ஜ்” என்றான்.

“நானா? நான் போறதா..?” என்றாள் பார்வதி” ஓ! புறப்படுங்க” என்றான்.

பார்வதிக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சிதான். உடனேயே தன் பொதிகளைத் தயார் செய்தாள்.

மூன்று மணிக்கு நான்கு பேருந்துகள் (இலங்கை போக்குவரத்துச்சபையுடையது) வந்தன.

பெயர்ப் பட்டியலை பார்வதியிடம் கொடுத்து, போக வேண்டியவர்களை லைனுக்கள் விட்டு குறிப்பிடும்படி ஒரு பென்சிலைக் கொடுத்தான் சார்ஜன்ட். பேருந்திற்கும் லைன் எண்ணப்படும் இடத்துக்கும் இரு மருங்கும் ஆமிப் பெண்கள் நின்றனர்.

பார்வதி பெயரை வாசிக்க வாசிக்க, ஒவ்வொருவராக பேருந்தை நோக்கி நடந்தனர். ஒவ்வொரு பேருந்துக்குள்ளும் ஐம்பது பேர் ஏற்றப்பட்டனர். பொதிகளே பெரும் இடத்தைப் பிடித்தன. அனைவரும் போன பின், பார்வதி தன் பெயரக் குறித்து விட்டு பட்டியலை கொடுக்க,

“ பாருங்க, உங்கள இவங்களுக்கு லீடரா போட்டிருக்கு, அப்ப உங்களுக்கு முதல் சீட் விட்டிருக்க வேணும், மூணு பஸ்சிலும் விடல்ல, தமிழ் மனிசர் இப்படித்தான். நாங்க அப்படியல்ல, முதல் வயசுக்கு மரியாதை” என்றார் சார்ஜன்ட். ரோசி தலை கவிழ்ந்தாள்.

## ஊழிக்காலம்-2

**44**



தாங்கள் அவ்வளவு தொல்லை கொடுத்தும் கூட அவன் தன்மீது வைத்திருந்த மதிப்பைக் கண்டபோது அது பார்வதிக்கு வருத்தத்தை கொடுத்தது.

“சரி, இவங்க வரட்டும் நீங்க போங்க” இன்னும் ஐம்பது பிள்ளைகள் நின்றனர்.

பார்வதி முன்னே நின்ற பேருந்தில் பொதியுடன் ஏறினாள். அதிலும் முதல் ஆசனத்தில் ஒரு பெண் இருந்தாள். வாகனத்தின் இடத்தை ஒதுக்கிச் சரிபார்த்துக் கொண்டிருந்த சார்ஜன்ட். “முதல் சீற்றில் யாரும் ஒக்கார வேண்டாம்” என்றான்.

பார்வதி ஏறி மேலே வர, ‘‘அம்மா, நீங்க அந்த முதல் சீற்ல இருங்க” என்றான். பார்வதி அமர்ந்தாள். தன்னுடன் இன்னொரு பெண்ணையும் அமர்த்திக் கொண்டாள். இன்னும் மீதமாக இருந்த பெண்கள் நான்கு பஸ்களிலும் பகிர்ந்து ஏற்றப்பட்டனர்.

அனைவரிடமும் புறப்பட்டவர்கள் விடை பெற்றனர். பொறுப்பாளர் மிக வாட்டமாக இருந்தான். பேருந்து நகர ஆரம்பித்த கொஞ்ச நேரத்துக்குள் மழை கொட்டவாரம்பித்தது. தூறலாக ஆரம்பித்து பெரும் மழையாக மாறியது. பல இடங்களில் மண்வீதி களிமண்ணாக இருந்தது. வாகனம் மிக அவதானமாக மெதுவாகச் சென்றதால் பூவரசங்குளத்தை அடையும் முன்பே இருட்டிவிட்டது.

முன்பின் அறியாத இடத்தில் இருட்டில் இறங்கியவர்களைப் பொதிகளுடன் ‘அதில் லைன் பண்ணு. இதில லைன் பண்ணு’ என்று இழுத்தடித்தார்கள். நேரம் இரவு பதினொன்றைக் கடந்துவிட்டது. உணவெதுவும் வழங்கப்படவில்லை. இருநூற்றைம்பது பேரும் நிற்க மட்டுமே இந்த மண்டபம் போதுமானதாக இருந்தது. அதிலேயே சிலர் பொதிகளின் மீது அமர்ந்த நிலையிலேயே உறங்கினர். அனைவரும் பேருந்திலிருந்து இறங்கி மழைநீரில் நடந்து உள்ளே வந்திருந்தனர். யாரும் தமது காலணிகளை வெளியே விடச் சம்மதிக்கவில்லை. அதனால் மண்டபமும் இப்போது மழை பெய்த முற்றம் போலவேயிருந்நது.

இரவு பெரிய மாடிக்கட்டடத்தினுள் அனைவரையும் அனுப்பி “எல்லோரும் படுங்க.. காலைல பாப்பம்” என்று விட்டுப் போனார்கள். திமுதிமுவெனப் பாய்ந்த பிள்ளைகள் களமுனைகளைப்போல நினைத்தார்களோ என்னவோ, ஆங்காங்கே விழுந்து உறங்கிப் போனார்கள். பார்வதி மேலே மாடிக்குப் போனாள். அங்கிருந்த ஒரு இடைவெளியில் பொதிகளை வைத்து விட்டுப் படுத்தாள். (வரும்)

# யானை புகுந்த நிலம் போல...

| துறை | எதிர்பார்க்கப்படும் நிதி ஒதுக்கீடு | உத்தேச வருவாய் அல்லது செலவு குறைப்பு |
|---|---|---|
| வாழ்க்கைச் செலவு | | |
| மின்சக்தி கட்டண தளர்வு | $3 பில்லியன் | |
| சிறு/குறு நிறுவனங்களுக்கான மறுசுழற்சி பயன்பாடு - வரி சலுகை | $3.8 பில்லியன் | |
| மருத்துவம் | $2.2 பில்லியன் | |
| வேப்பிங் (புகை ) தடை மற்றும் பிரசார செலவுகள் | $270 மில்லியன் | |
| மருந்துசீட்டு சீர்திருத்த நடைமுறைகள் | $2.2 பில்லியன் | $2.2 பில்லியன் |
| முதியோர் நலவாழ்வு | $29.6 பில்லியன் | |
| | | |
| பெட்ரோலிய வள வாடகை வரி | | 2.2 பில்லியன் |
| பாதுகாப்பு | 19 பில்லியன் ( நான்கு ஆண்டுகளுக்கு ) | |
| | | |
| குழந்தைகள் பராமரிப்பு உதவித்தொகை | 1.25 பில்லியன் | |

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசு பதவியேற்றதிலிருந்து பொதுமக்களின் நலனை விட ராணுவம் மற்றும் பாதுகாப்பு முதலான துறைகளிலேயே கூடுதல் கவனம் செலுத்திவருகிறது. தொடர்ந்து எகிறிவரும் பணவீக்க உயர்வினால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வேலை தேடுவோர் உதவித்தொகையை எல்லோருக்கும் கொடுக்காமல், 55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே வாரம் 50$ வீதம் அதிகரிக்கக்கூடும் என்று கோடிட்டுக்காட்டியிருக்கிறார்கள். ஏறி வரும் பணவீக்கத்திற்கு ஏற்ப உயர்கல்வி கடனிற்கும் வட்டி வீதம் அதிகரித்திருக்கிறது. உயர்திரு. ஜிம்மிடம் இந்த கடன்களுக்கான வட்டிவீதம் குறைப்பிற்கான திட்டம் எதுவுமில்லை .

கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்

நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும்

என நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

இதன்பொருளானது, “அரசனிடம் யானைப் படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட் படை ஆகிய நான்கு படைகளும் சிறப்பாக இருந்தாலும், பெருமைமிக்க அறநெறிதான் ஆட்சியின் வெற்றிக்கு அடிப்படையாகும்”. அல்பானிஸ் அரசால் வெளியிடப்பட்ட பாதுகாப்பு திட்ட மறுவரைவு ( Defence Strategy Review ) படி, முற்றிலும் மாறுபட்ட பாதுகாப்பு சூழலுக்கு மத்தியில் அரசாங்கத்தின் நோக்கமானது தொலைநோக்கு இராணுவ சக்தியை உருவாக்கும் . அதாவது நீங்கள் என்னதான் முற்றிலும் மாறுபட்ட / வேறுபட்ட இராணுவ தளவாடங்கள் வாங்கி கட்டமைப்பை பெருகினாலும் , பொதுமக்களின் நல்வாழ்வை காக்கும் அறநெறி ஆட்சியில்தான் அடங்கியிருக்கிறது. அன்டனி - ஜிம் கூட்டணியின் வெற்றி அவர்கள் கையில்தான் இருக்கிறது. இந்த விடை தெரியாத கேள்விக்கு காலம் தான் பதில் சொல்லவேண்டும்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Video Intercom
Access Control
Security Fog System
Smart Home
Security Alarm
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transsco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

*We love to deliver*

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
**Dandenong South**
**(03) 9703 2255**

45 Adrian Rd
**Campbellfield**
**(03) 9357 7228**

SYDNEY - **02 9897 0004**
PERTH - **08 9452 7707**
BRISBANE - **07 3219 0203**
CANBERRA - **02 62821905**
TASMANIA - **03 90174167**
ADELAIDE - **08 8322 8825**
DARWIN - **08 79790002**

**1300 1 TRANSCO** (1300 187 267)

**WWW.TRANSCOCARGO.COM.AU**